# குடியியற் கல்வி

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 10

**(2015 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம்: www.nie.lk மின்னஞ்சல் : info@nie.lk

**குடியியற் கல்வி**
தரம் - 10
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2014

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

***பதிப்பு :***
***பதிப்பகம்***
தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காக பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் இணைத்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாக பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்கும் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்கும் கற்றல் கற்பித்தல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக்குழு

**வழிகாட்டலும் அனுமதியும்**

| | |
|---|---|
| கல்விசார் அலுவல்கள் சபை | தேசிய கல்வி நிறுவகம் |

**பாட ஒருங்கிணைப்பு**

| | |
|---|---|
| திரு. ஏ.எல்.எஸ். அபேவிக்ரம | சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |

**எழுத்தாளர் குழு (வெளிவாரி)**

| | |
|---|---|
| திரு. சீ.எஸ். ஜயசிங்ஹ | ஓய்வு பெற்ற ஆசிரியர் நிலைய முகாமையாளர், ஹொரண |
| திரு. எம்.கே.கே. பிரியந்த | விரிவுரையாளர், உருகுணை தேசிய கல்வியியற் கல்லூரி |
| திருமதி. பீ.பீ. மாளிகா | ஆசிரியர் ஆலோசகர், அம்பாந்தோட்டை |
| திருமதி. சோமவதி | ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆலோசகர், புளத்சிங்ஹள |
| திரு. கே.ஏ.என். புஷ்பகுமார | ஆசிரியர் சேவை, பொல்கொட ம.வி. மஹகம |
| திரு. எம்.எச்.எம். யாக்கூத் | முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.நி. |

**பாடநிபுணத்துவ சேவை**

| | |
|---|---|
| கலாநிதி. ஷாமிந்த வனசிங்ஹ | விரிவுரையாளர், கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| திரு. வசந்த செனவிரத்ன | சிரேஷ்ட விரிவுரையாளர், சட்டப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| சட்டத்தரணி மெலனி பலிகக்கார | ஒருங்கிணைப்பு அதிகாரி, மனித உரிமைகள் கல்வி கேந்திரம், சட்டப்பீடம் கொழும்பு பல்கலைக்கழகம் |

**எழுத்தாளர் குழு (உள்வாரி)**

| | |
|---|---|
| திரு. ஏ.எல்.எஸ். அபேவிக்ரம | சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |
| திருமதி. எஸ்.யூ.ஐ.கே. த சில்வா | விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |
| திரு. எஸ். கருணாகரன் | விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி. |

| | |
|---|---|
| **தமிழாக்கம்** | திரு. எம்.எச்.எம். யாக்கூத் ஓய்வு பெற்ற பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.நி |

**மொழிச் செவ்விதாக்கம்**

| | |
|---|---|
| திரு. எஸ். கருணாகரன் | விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி. |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டிலிருந்து 10 - 11 ஆம் தரங்களக்கான குடியியலும் ஆட்சியும் எனும் பாடம் 2015 இலிருந்து குடியியற் கல்வி எனும் பெயரில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதற்கிணங்க 6 - 9 ஆம் தரம் வரை குடியியற் கல்வி கட்டாய பாடமாகவும் 10 - 11 ஆம் தரம் வரை முதலாவது தொகுதியில் தெரிவுப் பாடமாகவும் நடைமுறைக்கு வரும். 10 - 11 ஆம் தரத்திற்காக வாரமொன்றுக்கு மூன்று பாடவேளைகள் இப்பாடத்தைக் கற்பிப்பதற்காக ஒதுக்கப்ட்டுள்ளது.

க.பொ.த. சா.த பரீட்சைக்கு 10 - 11 ஆம் தரங்களுக்கான பாடத்திட்டத்தை அடிப்படையாக்க கொண்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறைய இலகுபடுத்தும் பொருட்டு ஆசிரியர் வழிகாட்டியிலுள்ள பாட உள்ளடக்கத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் உங்களது ஆக்கத்திறனைப் பயன்படுத்தி வகுப்பறைத் தேவைகளுக்கமைவாக செயற்பாடுகளை விருத்தி செய்து பயன்படுத்தும் முழுமையான சுதந்திரம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

குடியியற் கல்வி பாடத்தின் மூலம் மேம்படுத்த எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்கையில் பாட விடயங்களுடன் கற்றலுக்கான முறையியல்களும் முக்கியமானவையாகும். இதன் பொருட்டு ஆசிரியர் பணியை இலகுபடுத்தும் வகையில் பாடப்புத்தகத்தையும் பயன்படுத்துதல் வேண்டும்.

10 ஆம் தரத்திற்கான இக்குடியியற்கல்வி ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்தும் போது ஒ்வவொரு தேர்ச்சிக்கும், தேர்ச்சி மட்டத்திற்கும் அமைவாக முன்வைக்கப்பட்டுக் கற்றல் பேறுகளை அடையும் வண்ணம் கற்றல் நிகழ வேண்டும். அதற்கான பாடத்தைத் திட்டமிடுகையில் உள்ளடக்க வேண்டிய பாடவிடயங்கள் தேவையான உதாரணங்களுடன் வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியர் கைந்நூலைப்பயன்படுத்துகையில் ஒ்வவொரு தலைப்பிற்கும் சமாந்திரமான வகையில் பாடசாலையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களையும் செய்றபாடுகளையும் கருத்திற் கொண்டு செயற்படுதல் அவசியமாகும். இங்கு தரப்பட்டுள்ள தரவுள்ளீடுகளுக்கு மாற்றீடாகத் தேவையானவற்றைப் பயன்படுத்தும் சுதந்திரம் உங்களுக்கு வழங்கப்ப ட்டுள்ளது.

குடியியற் கல்வி பாடத்தின் நோக்கம் அடையப்படும் வண்ணம் குறைந்த பட்சம் 50 சதவீத பிரயோக ரீதியிலான செய்றபாடுகளை அடிப்படையாகக் கொண்டு கற்றல் சந்தரப்பங்களை மாணவருக்கு வழங்குவதுடன் குறிக்கப்பட்டுள்ள பாடவிடயங்களை கற்கைக்கு உட்படுத்துதல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பில் உங்களது ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் எமக்கு வழங்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

**செயற்றிட்டக் குழு**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப்பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| கலைத்திட்ட அபிவிருத்திக்குழு | v |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | vi |
| பாடத்திட்டம் | ix |
| கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | |
| 10.1 ஜனநாயக ஆட்சி | 03 |
| 10.2 அதிகாரப் பரவலாக்கமும் அதிகாரப் பகிர்வும் | 14 |
| 10.3 பல்பண்பாட்டுச் சமூகம் | 22 |
| 10.4 பொருளாதார முறைகளும் பொருளாதாரத் தொடர்புகளும் | 28 |
| 10.5 சனநாயக சமூகமொன்றில் முரண்பாடு தீர்த்தல் | 35 |

# பாடத்திட்டம்

# அறிமுகம்

1999 ஆம் ஆண்டின் கல்வி மறுசீரமைப்புப் பிரேரணைகளின்படி, 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 7 ஆம் 8 ஆம் 9 ஆம் தரங்களில் "வாழ்க்கைத் தேர்ச்சிகள்" எனும் பாடம் முதன் முதலாக கலைத்திட்டத்தில் அறிமுகஞ் செய்யப்பட்டது.

தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கைப் பிரேரணைகளின்படி 2005 ஆம் ஆண்டு தொடக்கம் "வரலாறும் சமூகக்கல்வியும்" எனும் பாடத்துக்குப் பதிலாக, 6-11 ஆந் தரங்களுக்காக, குடியியற்கல்வி, புவியியல், வரலாறு ஆகிய பாடங்கள் அறிமுகமாயின. அதேவேளை 7-9 ஆந் தரங்களில் "வாழ்க்கைத் தேர்ச்சிகள்" எனும் பாடமும் நடைமுறையில் இருந்தது.

2007 ஆம் ஆண்டு கல்வி மறுசீரமைப்புக்களின் கீழ், வாழ்க்கைத் தேர்ச்சிகள், குடியியற்கல்வி ஆகிய பாடப்பகுதிகள் இணைக்கப்பட்டு 6-9 ஆந் தரங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 10-11 ஆந் தரங்களுக்காக, "குடியியற்கல்வியும் ஆட்சியும்" எனப் பாடத்தின் பெயர் மாற்றப்பட்டது.

அதற்கமைய 6-9 ஆந் தரங்களில் பகுதி Ⅰ என வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடமும், பகுதி Ⅱ என குடியுரிமைக்கல்விப்பாடமும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இவ்வாறாக நடைமுறைப்படுத்துகையில் தோன்றிய நடைமுறைப்பிரச்சினைகள், அது வரையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டவை, ஆசிரியர்களின் கருத்துக்கள், ஆசிரிய ஆலோசகர்களின் கருத்துக்கள் போன்றவற்றை கவனத்திற் கொண்டு இப்பாடத்தை இரண்டு பகுதிகளாகவன்றி, ஒரு தனிப்பாடமாக நடைமுறைப்படுத்துவது விளைதிறனானது என்பது உணரப்பட்டது.

6-9 ஆந் தரங்களில் இப்பாடத்தை இரண்டு பகுதிகளாக நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, பாடப்பகுதிகளிரண்டினதும் உள்ளடக்கத்தின் ஒத்ததன்மையைக் கவனத்திற் கொண்டு அவற்றை ஒரு பாடமாக ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்துவது மிகப் பொருத்தமானதாகையால், பாடத்திட்ட நவீனமயப்படுத்தலின்போது ஒரு தனிப்பாடமாக நடைமுறைப்படுத்தத்தக்க வகையில் பாடத்திட்டம் மீள ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடப்பகுதியில் அடங்கியிருந்த பாடப்பகுதிகள், தேவை கருதி, பொருத்தமானவாறு குடியியற்கல்விப் பாடப்பகுதியுடன் ஒன்றிணைக்கப்பட்டது.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.



2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
   - ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
   - நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
   - மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போசிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்
விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## குடியியற்கல்வி
## தரம் 6 - 11 பாடக்குறிக்கோள்கள்

1. தமது திறன்கள், ஆற்றல்கள், இயலுமைகளை இனங்கண்டு எதிர்கால வாழ்க்கை இலட்சியங்களை உருவாக்குவதற்கு தேவையான மனோதிடத்தை வளர்த்துக் கொள்ளல்.
2. சிறந்த ஆளுமையுடன் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை வளர்த்தல்.
3. சமூகத்தின் சிறப்பான நிலவுகைக்குப் பங்களிப்புச் செய்யும் சமூக அமைப்புக்கள், நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்குத் தேவையான மனோதிடத்தை வளர்த்தல்.
4. நிதமும் மாற்றமடைந்து செல்லும் உலகில் எதிர்பாராத சிக்கார்ந்த நிலைமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தேவையான ஆற்றல்களை வளர்த்தல்.
5. பன்மைச் சமூகத்தில் ஐக்கியமாக வாழ்வதற்குத் தேவையான மானுடப் பண்புகளையும் சமூக விழுமியங்களையும் கொண்ட பிரசைகளை உருவாக்குதல்.
6. சனநாயகக் கோட்பாடுகளுக்கும் மனித உரிமைகள் தொடர்பான சாசனங்களுக்கும் அமைவாகச் செயற்படும் சமூகமொன்றினை உருவாக்குதல்.
7. அனர்த்த முகாமையில் உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்து அனர்த்த நிலைமைகளைத் தவிர்த்தலும் ஏற்படத்தக்க இழப்புக்களைக் குறைத்தலும்.
8. அரசியல் எண்ணக்கருக்கள், அவற்றின் நடைமுறைப்பிரயோகங்கள், இலங்கை மற்றும் உலகின் ஆட்சிப்போக்கு தொடர்பான விளக்கத்தை வழங்குதல்.
9. பல்வேறு பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பல்வேறு பொருளாதார அடிப்படைகளை நுணுகியாய்தலும் அவற்றைச் சமூக வாழ்க்கைக்கு உரித்தாக்கிக் கொள்ளலும்.
10. பரஸ்பரம் பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் மதிக்கும் சமூகமொன்றினை உருவாக்குதல்.
11. சமாளிக்கக்கூடிய வாழ்க்கைக் கோலமொன்றினைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கையின் பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

# குடியியற்கல்வி

## தரம் - 10

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **சனநாயக ஆட்சி**<br>10.1 சனநாயக மக்கட் சமூகத்தில் நற்பிரசையாகச் செயற்படுவார். | 10.1.1 சனநாயகத்தின் இயல்பையும் வளர்ச்சியையும் நுணுகியாய்வார். | • சனநாயகம் - எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்தல்<br>• சனநாயக ஆட்சி முறையின் தோற்றமும் வளர்ச்சியும்<br>• நேரடி, மறைமுக பிரதிநிதித்துவம் | • 'சனநாயகம்' என்பதை வரைவிலக்கணங்களினூடாக விளக்குவார்.<br>• நேரடி சனநாயகத்தின் அடிப்படை இயல்புகளைப் பகுத்தாராய்வார்.<br>• நேரடி - சனநாயகத்துக்கு நேரில் சனநாயகத்திற்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை ஒப்பிடுவார். | 04 |
| | 10.1.2 சனநாயக ஆட்சியின் பிரதான இயல்புகளைப் பகுத்தாய்வார். | • சனநாயக ஆட்சி முறையொன்றின் இயல்புகள்<br>  • சர்வசன வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கங்களையும் ஆட்சியாளர்களை யும் தெரிவு செய்தல்<br>  • போட்டித் தன்மை வாய்ந்த கட்சி முறை<br>  • தேர்தல் தொகுதி முறை<br>  • நீதியும் சுதந்திரமுள்ளதுமான தேர்தல்கள் | • சனநாயக ஆட்சிமுறையில் காணப்படும் பண்புகளைக் குறிப்பிடுவார்.<br>• சனநாயக ஆட்சிமுறையொன்றின் இருப்பு மீது பங்களிப்புச் செய்யும் காரணிகள் செயற்படும் விதத்தை விளக்குவார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | | • ஆளும் கட்சியும் எதிர் கட்சியும் இருத்தல்<br>• சமத்துவத்தையும் சுதந்திரத் தையும் அடிப்படையாகக் கொண்டு, சனநாயகச் செயற்பாடுகளில் பங்கு பற்றல்<br>• அரசியலமைப் பிற் கு அமைவாகச் செயற்படல்<br>• ஊடக சுதந்திரமும் தகவல் பெறும் உரிமையும்<br>• நீதித்துறைச் சுதந்திரம்<br>• சட்டத்தின் ஆட்சியும் சட்டத்தின் முன் சமத்து வமும் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.1.3 அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாடுகளையும் பிரசைக்குரிய பொறுப்புக்களையும் ஒப்பிடுவார். | • அரசு, அரசாங்கம் - வரைவிலக்கணப்படுத்தல்<br>• அரசு, அரசாங்கம் ஆகியவற்றின் பிரதான அம்சங்கள்<br>• அரசு, அரசாங்கம் ஆகியவற்றின் தன்மை<br>  • அரசின் தன்மை<br>  • தேசிய அரசின் தன்மை<br>  • தேசிய அரசின் தோற்றமும் வளர்ச்சியும்<br>• அரசின் வகிபாகம்<br>  • அரசுகளின் பிரதானமான தன்மைகள்<br>  ஒற்றையாட்சி அரசு/ கூட்டரசு<br>  • ஒற்றையாட்சி அரசு, கூட்டரசுகள் ஆகியவற்றின் அடிப்படை இயல்புகள்<br>  • அரசாங்கத்தின் பிரதான கூறுகளும் அவற்றின் தொழிற்பாடுகளும்<br>    • சட்டத்துறை<br>    • நிறைவேற்றுத்துறை<br>    • நீதித்துறை<br>• அரசாங்கத்தின் தன்மை<br>  • பாராளுமன்ற முறை<br>  • சனாதிபதி முறை | • அரசு, அரசாங்கம் ஆகிய எண்ணக்கருக்களை வரைவிலக்கணங்களின் துணையுடன் விளக்குவார்.<br>• அரசினது தன்மையையும் அரசாங்கத்தினது தன்மையையும் விளக்குவார்.<br>• தேசிய அரசின் தன்மையை விளக்குவார்.<br>• ஒற்றையாட்சி மற்றும் கூட்டு அரசுகளின் அடிப்படைப் பண்புகளை ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாராய்வார்.<br>• அரசாங்கத்தின் பிரதான கூறுகளையும் அவற்றின் தொழிற்பாட்டையும் விளக்குவார்.<br>• பாராளுமன்ற ஆட்சி முறைக்கும் சனாதிபதி ஆட்சி முறைக்கும் இடையிலான வேறுபாட்டில் அவற்றின் அடிப்படையான இலட்சணங்களுக்கு இடையிலான வேறுபாடுகளையும் விசாரித்தறிவார்.<br>• சனநாயக மக்கட் சமூகமொன்றின் பிரசை என்ற | 16 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பிரசையின் பொறுப்புக்கள்<br>  • அரசுக்குச் சார்பு<br>  • பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்<br>• பிரசையின் பொறுப்புக்கள்<br>  • சமத்துவம்<br>  • சட்டத்தின் நியாயத்தன்மை | வகையில் தமது பொறுப்புக் களை நன்கு விளங்கிச் செயற்படுவதன் முக்கியத்து வத்தை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார். | |
| | 10.1.4 சனநாயக இலட்சியங் களை உள்வாங்குவார். | • சனநாயக ஆட்சிமுறையொன்று வெற்றியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்<br>  • நீதியும் சுதந்திரமானதுமான தேர்தல் நடத்துதல்<br>  • சட்டத்தின் ஆட்சி நிலவுதல்<br>  • நீதித்துறைச் சுதந்திரம்<br>  • புத்திக்கூர்மையுள்ள பொதுமக்கள் இருத்தல்<br>  • சிறந்த பொருளாதார நிலை காணப்படல்<br>  • சுதந்திரமான பக்கச்சார்பற்ற பொதுசனத் தொடர்புச் சாதனத்துறை காணப்படுதல்<br>• சனநாயக ஆட்சியின் முக்கியத்துவம்<br>  • சம உரிமைகள் உரித் தாதல் | • சனநாயக ஆட்சி வெற்றி அடைவதில் பங்களிக்கும் காரணிகளை விளக்குவார்.<br>• சமூகமொன்றின் நல்ல இருப்புக்காக சனநாயக ஆட்சிமுறை முக்கியத்தவம் பெறும் விதத்தை நுணுகி நோக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • தனியாளின் ஆற்றல்கள், திறன் விருத்திக்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்<br>• ஆட்சியில் பங்குகொள்வதற்குப் பிரசைகளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்<br>• மானுட அபிவிருத்திக்கு முன்னுரிமை கிடைத்தல்<br>• சமாதானமான சமூகமொன்று உருவாவதற்குத் தேவையான அடித்தளம் உருவாதல்<br>• சமூக நலனோம்பல் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **அதிகாரத்தைப் பன்முகப்படுத்துதலும் பகிர்ந்தளித்தலும்**<br>10.2 அதிகாரத்தைப் பன்முகப் படுத்தல், அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக்கருக்கள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 10.2.1 அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல், அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக்கருக்களை ஒப்பிட்டு நோக்குவார். | • அதிகாரத்தைப் பன்முகப் படுத்தல், அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக்கருக்கள் - அறிமுகம் | • ‘அதிகாரம்’ என்பது யாது என வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• அதிகாரத்தைப் பன்முகப்படுத்துதல் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக் கருக்களை விளக்குவார். | 02 |
| | 10.2.2 அதிகாரத்தைப் பன்பமுகப்படுத்தும் அலகுகளின் கட்டமைப்புக்கள், அதிகாரங்கள், கருமங்களை நுணுகியாய்வார். | • அதிகாரப் பன்முகப்படுத்துதல் அலகுகள்<br>• மேற்படி அலகுகளின் கட்டமைப்புக்கள்<br>• மேற்படி அலகுகளின் அதிகாரங்களும் கருமங்களும்<br>• தற்கால அரசுகளில் அதிகாரத்தைப் பன்முகப்படுத்துவதற்கான காரணங்கள் | • அதிகாரத்தைப் பன்முகப்படுத்தும் அலகுகளைப் பெயரிட்டு அவற்றின் அமைப்புக்களை விளக்குவார்.<br>• அதிகாரத்தைப் பன்முகப் படுத்தும் அலகுகளின் அதிகாரங்களையும் பணிகளையும் விளக்குவார்.<br>• நவீன அரசுகளில் அதிகாரத்தைப் பரவலாக்குவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகளை விளக்குவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.2.3 அதிகாரத்தைப்பகிர்ந்தளிக்கும் அலகுகளின் கட்டமைப்புக்கள், அதிகாரங்கள், கருமங்களை நுணுகியாய்வார். | • அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகள்<br>• மேற்படி அலகுகளின் கட்டமைப்புக்கள்<br>• மேற்படி அலகுகளின் அதிகாரங்களும் கருமங்களும்<br>• தற்கால அரசுகளில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான காரணங்கள்<br>• இலங்கையில் அதிகாரப் பன்முகப்படுத்தல், அதிகாரப் பகிர்வு ஆகியவற்றின் வரலாறு | • அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகளைப் பெயரிடுவார்.<br>• அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகளின் சட்ட அமைப்பை விளக்குவார்.<br>• அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகளின் அதிகாரங்களையும் கருமங்களையும் நுணுகியாய்வார்.<br>• நவீன அரசுகளில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான காரணங்களை நுணுகியாய்வார்.<br>• தற்கால அரசுகளில் அதிகாரத்தைப் பன்முகப்படுத்துவதன் அல்லது பகிர்ந்தளிப்பதன் அவசியத்தை நுணுகியாய்வார்.<br>• எமது நாட்டில் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அதிகாரம் பகிர்ந்தளிப்பு வரலாற்றைத் தேடியாய்வார். | 05 |
| | 10.2.4 தற்கால அரசுகளில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதன் அவசியத்தை மதிப்பார். | • தெரிவு செய்த அரசுகளின் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள்<br>  • ஐக்கிய அமெரிக்கக் குடியரசு<br>  • சுவிற்சர்லாந்து | • அமெரிக்க ஐக்கிய குடியரசு, சுவிற்சலாந்து ஆகிய நாடுகளில் அதிகாரம் பகிரப்பட்டமைக்கான காரணங்களைக் கலந்துரையாடுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **பன்மைப் பண்பாட்டுச் சமூகம்**<br>10.3 பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் சமாதானத்துடன் நற்பிரசையாக வாழ்வார். | 10.3.1 பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் தன்மையை நுணுகியாய்வார். | • "பன்மைப் பண்பாட்டுச் சமூகம்" எனும் எண்ணக்கரு அறிமுகமும் அதன் அடிப்படை இயல்புகளும் | • பல்பண்பாட்டுச் சமூகம் என்பதை விளக்குவார்.<br>• பல்பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படை இயல்புகளை விவரிப்பார். | 03 |
| | 10.3.2 பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் பங்களிப்புச் செய்யும் காரணங்களை நுணுகியாய்வார். | • பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகள்<br>• அமைவு<br>• புலம்பெயர்வு<br>• முற்றுகை<br>• பல்வேறு நாட்டவர் வியாபாரத்துக்காக வருகை தந்தமை<br>• உழைப்பாளிகள் தருவிக்கப் பட்டமை | • பல்பண்பாட்டுச் சமூகமொன்று தோன்றுவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகளை விவரிப்பார்.<br>• தற்கால இலங்கையில் பல் பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் வணிகமும் ஊழியப் படை தாபிக்கப்பட்டமையும் பங்களிப்புச் செய்துள்ள விதத்தையும் விளக்குவார். | 03 |
| | 10.3.3 பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் இருப்புக்காக நல்லாட்சியின் முக்கியத்துவத்தை நுணுகியாய்வார். | • நல்லாட்சி - அறிமுகம்<br>• நல்லாட்சியின் இயல்புகள்<br>• நல்லாட்சிக்காக அவரவரது அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தனித்துவத்தை மதிப்பதன் முக்கியத்துவம்<br>• பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் இருப்புக்கு நல்லாட்சியின் முக்கியத்துவம் | • நல்லாட்சி என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• நல்லாட்சியின் இயல்புகளைக் கலந்துரையாடுவார்.<br>• பல்பண்பாட்டு மக்கட் சமூகத்தின் இருப்பை நல்லாட்சியினூடாக உறுதிப்படுத்தும் விதத்தை விளக்குவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.3.4 பன்மைப் பண்பாட்டு மக்கள் சமூகத்தில் வாழ்வதன் முக்கியத்துவத்தை விளக்குவார். | • பன்மைப் பண்பாட்டுச் சமூகமும் நவீன அரசுகளும்<br>• பன்மைப்பண்பாட்டுச் சமூகத்தின் நல்ல இருப்புக்காக பிரசையொருவர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய பண்புகள்<br>  • பரஸ்பரம் ஒருவரையொருவர் மதித்தல்<br>  • ஏனையோரின் பண்பாடுகளை மதித்தல்<br>  • சகிப்புத்தன்மை<br>  • கொடையாளராதலும் சகவாழ்வும்<br>  • வேற்று மொழிகளைக் கற்றல்<br>  • சமத்துவம்<br>• பன்மைப்பண்பாட்டுச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் ஐக்கியமாக வாழ்வதன் தேசிய முக்கியத்துவம் | • நவீன அரசுகள் பலவற்றில் பண்பாட்டுச் சமூக இயல்புகள் காணப்படுகின்றமையை விளக்குவார்.<br>• பல்பண்பாட்டுச் சமூகமொன்றில் நல்ல இருப்புக்காக பிரசைகள் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்புகளை விளக்குவார்.<br>• பல்பண்பாட்டுச் சமூக உறுப்பினர் என்ற வகையில் கூட்டாக வாழ்வதன் தேசிய முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **பொருளாதார முறைகளும் தொடர்புகளும்**<br>10.4 இலங்கை எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளின்பால் விசேட கவனஞ் செலுத்திப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவார். | 10.4.1 அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளையும் பொருளாதாரச் செயற்பாடுகளையும் நுணுகியாய்வார். | • பொருளாதார முறை<br>- வரைவிலக்கணப்படுத்தலும்<br>- அறிமுகமும்<br>• எந்தவொரு பொருளாதாரமும் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை இனங்காணல்<br>• உற்பத்திக்காரணிகளும் அவற்றுக்காகச் செய்யும் செலவுகளும் - விளக்கம்<br>• பொருளாதாரத்தில் இடம்பெறும் செயன்முறைகள் - விளக்கம் | • 'பொருளாதார முறை' என்பதை வரைவிலக்கணப் படுத்துவார்.<br>• பொருளாதாரமொன்று எதிர் கொள்ளும் அடிப்படையான பிரச்சினைகளை விளக்குவார்.<br>• உற்பத்திக் காரணிகளையும் அவற்றுக்காகச் செய்யும் செலவுகளையும் விளக்குவார்.<br>• பொருளாதார முறைமையொன்றினால் ஆற்றப்படும் அடிப்படைப் பொருளாதாரச் செயற்பாடுகளை விவரிப்பார். | 03 |
| | 10.4.2 பல்வேறு பொருளாதார முறைகள் தொடர்பான தகவல்களைத் தேடியாய்வார். | • வெவ்வேறு பொருளாதார முறைகளை இனங்காணல்<br>• முதலாளித்துவப் பொருளாதார முறை<br>• சோசலிச (சமதர்மப்) பொருளாதார முறை<br>• கலப்புப் பொருளாதார முறை | • உலகில் உள்ள வெவ்வேறு பொருளாதார முறைகளைக் குறிப்பிடுவார்.<br>• வெவ்வேறு பொருளாதார முறைகளின் அடிப்படை இயல்புகளைப் பகுத்தாராய் வார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.4.3 அபிவிருத்திக்குச் சார்பாக சந்தைப் பொருளாதாரத்தின் தற்போதைய போக்குகளை நுணுகியாய்வார். | • சந்தைப்பொருளாதார எண்ணக் கருவையும் அதன் வெவ்வேறு வடிவங்களையும் இனங்காணல்<br>• சந்தைப் பொருளாதாரமொன்றின் இயல்புகள்<br>• சந்தைப் பொருளாதாரத்தின் பல்வேறு வடிவங்கள் | • "சந்தைப் பொருளாதாரம்" என்பது யாது என விளக்குவார்.<br>• சந்தைப் பொருளாதாரத்தின் இருப்புக்களைப் பட்டியற் படுத்துவார்.<br>• சந்தைப் பொருளாதாரத்தின் வெவ்வேறு வடிவங்களை விளக்குவார்.<br>• சந்தைப் பொருளாதாரத்தின் புதிய போக்குகளைக் கலந்துரையாடுவார். | 03 |
| | 10.4.4 இலங்கைப் பொருளாதாரத்தின் மீது உலகமயமாதலின் செல்வாக்கைப் பகுத்தாய்வார். | • இலங்கையின் தற்காலப் பொருளாதார முறையும் அபிவிருத்தியும்<br>• தற்கால இலங்கைப் பொருளாதாரத்துடன் இணைந்த புதிய அபிவிருத்திப்போக்குகள்<br>• தொழினுட்ப அபிவிருத்தி, உலகமயமாதல் ஆகியன உலகப் பொருளாதாரத்தின் மீதும் இலங்கை மீதும் செலுத்தும் செல்வாக்கு | • இலங்கையின் தற்போதைய பொருளாதார முறையின் விசேட இயல்புகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• 'அபிவிருத்தி' எனும் எண்ணக் கருவை வரைவிலக்கணப் படுத்துவார்.<br>• தற்கால இலங்கையின் புதிய அபிவிருத்திப் போக்குகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவார்.<br>• உலகப் பொருளாதாரத்தின் மீது உலகமயமாதலில் செல்வாக்கை விவரிப்பார்.<br>• உலகமயமாதலானது, இலங்கைப் பொருளாதாரத்தில் செலுத்தும் செல்வாக்கை நுணுகியாய்வார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **சனநாயக சமூகமொன்றில் மோதல் தீர்த்தல்** | | | | |
| 10.5 மோதல் தீர்த்தலுக்குத் தேவையான தேர்ச்சிகளை வெளிக்காட்டுவார். | 10.5.1 பல்வேறு வகையான மோதல்கள் தோன்றுவதற்கான காரணிகளைத் தேடியறிவார். | • மோதல் - அறிமுகம்<br>• மோதல் - வகைகளும் முரண்பாடுகள் தோன்றுவதற்கான மூலகாரணங்களும் | • முரண்பாடு என்பது யாது என விளக்குவார்.<br>• முரண்பாட்டு வகைகளைக் குறிப்பிடுவார்.<br>• முரண்பாடுகள் தோன்றுவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகளை விளக்குவார். | 05 |
| | 10.5.2 மோதல் தீர்ப்பதற்காக நேர்வகை அணுகு முறைகளைத் தேடியாய்வார். | • மோதல் தீர்த்தல் - வெவ்வேறு முறைகள்<br>• கலந்துரையாடல்<br>• கலந்தாலோசித்தலும் பேரம் பேசுதலும்<br>• தலையிடல்<br>• இணக்கப்படுத்தல் (Mediation)<br>• நடுத்தீர்ப்பு (Arbitration)<br>• தீர்ப்புச் செய்தல்<br>• இணக்கப்பாட்டைக் கட்டியெழுப்புதல்<br>• ஆலோசனை (Counselling) | • முரண்பாடு தீர்ப்பதற்கான வெவ்வேறு முறையியல்களை விளக்குவார்.<br>• முரண்பாடுகளைச் சமாதானமாக தீர்த்துக்கொள்வது, பிரசையின் பொறுப்பாகும் என்பதை ஏற்று அதற்குச் சார்பாக விடயங்களை முன்வைப்பார். | 07 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.5.3 சனநாயக சமூகமொன்றில் மோதல் தீர்த்தலின் முக்கியத்துவத்தைப் பகுத்தாய்வார். | • முரண்பாடுகளை சமாதானமான முறையில் தீர்த்துக் கொள்வதற்காக பிரசையிடத்தே காணப்பட வேண்டிய பண்புகள்<br>• மோதல்களைத் தவிர்த்தல் மற்றும் அமைதியான முறையில் தீர்த்துக் கொள்வதன் அனுகூலங்கள்<br>  • சகலரதும் உரிமைகள் பாதுகாக்கப்படுதல்<br>  • சமாதானமான சமூகமுறை உருவாதல்<br>  • பரஸ்பர ஒத்துழைப்பு வளர்ச்சியடைதல்<br>  • சமூகத்துக்கு ஏற்படும் இழப்புக்கள் இழிவாதல் | • முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்காக, பிரசையொருவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகளைக் கலந்துரையாடுவார்.<br>• முரண்பாடுகளைத் தவிர்த்தல் மற்றும் சமாதான தீர்த்துக் கொள்வதன் மூலம் தமது வாழ்க்கையில் ஏற்படும் நன்மைகளை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார். | 03 |

# கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்

## 10.1 சனநாயக ஆட்சி

பண்டைக்காலம் முதல் அரசாட்சிக்காகப் பல்வேறு ஆட்சிமுறைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. மன்னராட்சி, சர்வாதிகார ஆட்சி, செல்வர் ஆட்சி, சனநாயக ஆட்சி போன்றவை அவற்றுள் அடங்கும்.

சனநாயகம் என்பதன் பொருள், அதன் தோற்றமும் வளர்ச்சியும், அவ்வாறானதொரு ஆட்சி முறையில் காணப்படும் இயல்புகள், சனநாயகத்தை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான அம்சங்கள், அரசினதும் அரசாங்கத்தின் தொழிற்பாடு என்பன தொடர்பாக மாணவர்க்குக் கற்பதற்குச் சந்தர்ப்பமளிப்பதே இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

ஓர் ஆட்சி முறை என்ற வகையிலும் ஒரு வாழ்க்கை முறை என்ற வகையிலும் சனநாயகம் முக்கியத்துவம் பெறுகின்றமையால், சனநாயக ஆட்சி முறைக்கு இசைவடைவதற்குத் தேவையான தேர்ச்சிகளை மாணவரிடத்தே வளர்ப்பது முக்கியமானதாகும். சனநாயக வாழ்க்கை முறையின் இலட்சணங்களைக் கொண்ட சமூகமானது இந்த ஆட்சி முறையையும் அதன் இருப்பையும் உறுதிப்படுத்தும்.

அதற்கமைய சனநாயக இலட்சியங்களை மதித்தொழுகும் உறுப்பினர்களைச் சமூகத்துக்கு வழங்கும் தேவை குறித்து விசேட கவனஞ் செலுத்துவது அவசியமானது.

இங்கு தரப்பட்டுள்ள பாடவிடயங்களைப் பொருளுள்ள வகையிலும், செய்முறை ரீதியாகவும் கற்கச் சந்தர்ப்பமளித்து அவற்றைத் தன்வசப்படுத்திக் கொள்வதற்கும் மாணவனுக்குச் சந்தர்ப்பமளிக்கத்தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் - மதிப்பீட்டுக் கணிப்பீட்டுச் செய்முறையைக் கையாள்வது மிகவும் முக்கியமானது.

**தேர்ச்சி** :- சனநாயக மக்கட் சமூகத்தில் நற்பிரஜையாகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- **10.1.1 சனநாயகத்தின் தன்மையையும் வளர்ச்சியையும் நுணுகியாய்வார்.**

**பாடவேளைகள்** :- 04

**கற்றற் பேறுகள்** :-

- 'சனநாயகம்' என்பதை வரைவிலக்கணங்களினூடாக விளக்குவார்.
- நேரடி சனநாயகத்தின் அடிப்படை இயல்புகளைப் பகுத்தாராய்வார்.
- நேரடி சனநாயகத்துக்கும் மறைமுக சனநாயகத்திற்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை ஒப்பிடுவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

'சனநாயகம்' எனும் எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துவார். 'சனநாயகம்' எனும் எண்ணக்கரு தொடர்பான வரைவிலக்கணம் (பாடநூலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தைத் துணையாகக் கொள்க)

அரசறிவியலாளர்களால் சனநாயகம் எனும் எண்ணக்கரு, இரண்டு கண்ணோட்டங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

1. ஓர் ஆட்சி முறையாக
2. ஒரு சமூக மற்றும் வாழ்க்கைத் தத்துவமாக

**சனநாயக ஆட்சி முறையின் தோற்றமும் வளர்ச்சியும்**
சனநாயகமானது, நேரடி மற்றும் மறைமுக சனநாயகம் (பிரதிநிதித்துவ) என்றவாறாக இரண்டு விதமாகச் செயற்படுகின்றதென்பதை விளக்குக.

**தரவுள்ளீடுகள்**
சனநாயகம் பற்றிய வரைவிலக்கணங்கள், இயலுமெனின் சனநாயகம் பற்றிக் கலந்துரையாடுவதற்குவளவாளர்களைத் தருவிக்குக.

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**
சனநாயகம் பற்றிய எளிமையான வரைவிலக்கணங்களைக் கூறுவதற்கும் சனநாயகமென்பது வாழ்க்கை முறையும் சமூக முறைமையுமாகும் என்பதை தெளிவுறுத்தும் வண்ணம் பொருத்தமான நியதிகளினடிப்படையில் கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்ளவும்.

**தேர்ச்சி மட்டம்** **:- 10.1.2 சனநாயக ஆட்சியின் பிரதான இயல்புகளைப் பகுத்தாராய்வார்.**

**பாடவேளைகள்** **:-** 08

**கற்றற் பேறுகள்** **:-**

- சனநாயக ஆட்சிமுறையில் காணப்படும் பண்புகளைக் குறிப்பிடுவார்.
- சனநாயக ஆட்சிமுறையொன்றின் இருப்பு மீது பங்களிப்புச் செய்யும் காரணிகள் செயற்படும் விதத்தை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- சனநாயக ஆட்சிமுறையொன்றின் பண்புகள்

 உதாரணம் **:**
 - சர்வசன வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கங்களையும் ஆட்சியாளர்களையும் தெரிவு செய்தல்.
 - போட்டித்தன்மை வாய்ந்த கட்சி முறை
 - தேர்தல் தொகுதி முறை
 - சுயாதீனமாக நியாயமான தேர்தல்கள்
 - ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இருத்தல்
 - சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் அடிப்படையாகக் கொண்டு சனநாயகச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
 - அரசியலமைப்புக்கு அமைவாகச் செயற்படல்
 - ஊடக சுதந்திரமும் தகவல் பெறும் உரிமையும்
 - நீதிமன்றத்தின் சுயாதீனம்
 - சட்டத்தின் ஆதிக்கம் கோலோச்சுதலும் சட்டத்தின் முன்னே சமத்துவமும்

**சர்வசன வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கங்களையும் ஆட்சியாளர்களையும் தெரிவு செய்தல்.**

உதாரணம் **:**

- பிரதிநிதித்துவச் சனநாயகம் நடைமுறையிலுள்ள ஒரு நாட்டில் மக்கட் பிரதிநிதிகள் மூலம் ஆட்சி நடத்தப்படும்.
- சர்வசன வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்டே பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.
- குறித்த வயதெல்லையை தாண்டிய ஒவ்வொருவருக்கும் மதம், இனம், தொழில், பால் (ஆண் - பெண்), சொத்து வேறுபாடு எதனையும் கருதாது வாக்குரிமை உரித்தாகும்.
- சர்வசனவாக்குரிமை சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.
- சனநாயக ஆட்சிமுறையின் கீழ், மக்களின் ஆட்சி சர்வசனவாக்குரிமையின் மூலம் உண்மையிலேயே செயலுருப்பெறுகின்றது.

**போட்டித்தன்மை வாய்ந்த கட்சிமுறை**
போட்டித்தன்மை வாய்ந்த கட்சி முறை காணப்படுவதால் கிடைக்கும் அனுகூலங்கள்.
உதாரணம் :

- பன்மைத்துவத்தின் ஊடாக ஐக்கியம் கட்டியெழுப்பப்படுதல்.
- எதிர்க்கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுதல்.
- அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கக் கட்சியின் கட்சிகளின் பாதகமான செயற்பாடுகளை, ஆக்கப்பூர்வமாக விமர்சித்தல்.
- சாதகமான தொழிற்பாடுகளை மதித்து, அரசைச் சரியான பாதையில் வழிப்படுத்துதல்.
- தான்தோன்றித்தனமான ஆட்சி உருவாவதைத் தவிர்த்தல்.

**தேர்தல் தொகுதி முறை**
நிலப்பிரப்பின் அளவையும் சனத்தொகையையும் அடிப்படையாகக் கொண்டு, தேர்தலுக்காக பிரித்து வேறாக்கப்பட்ட நில அலகே தேர்தல் தொகுதியாகும் என்பதை விளக்குங்கள். எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் இலங்கை தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது என்பதை விளக்குங்கள்.

தேர்தல் தொகுதகளைப் பிரித்து வேறாக்குவதால் பின்வரும் அனுகூலங்கள் கிடைக்கும்.
உதாரணம் :

- சிறிய கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் பிரதிநிதித்துவத்தைப் பெறமுடிகின்றமை
- ஒவ்வொரு மக்கட் பிரிவினதும் கருத்துக்கள் பிரதிபலிக்கப்படுதல்.
- பிரதேச ரீதியில் அதிக பிரதிநிதித்துவம் கிடைத்தல்.

**சுதந்திரமும் நீதியுமான தேர்தல்கள்**
இலங்கை மக்களுக்கு வாக்களிப்பதற்கு கிடைக்கும் சந்தர்ப்பங்கள் சில உள்ளன.
உதாரணம்:

- சனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் தேர்தல் (சனாதிபதித் தேர்தல்)
- பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை நியமிப்பதற்காக நடத்தப்படும் தேர்தல்கள்.
- மக்கள் கருத்தெடுப்பு அன்றேல் ஒப்பங்கோடல்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதனூடாக வாக்காளருக்கு தமது கருத்தை சுதந்திரமாக வெளியிடுவதற்கும், சரியாக பொதுமக்கள் கருத்தை வெளியிடுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

**சுதந்திரமும் நீதியானதுமான தேர்தலின் பண்புகள்**
உதாரணம் :

- குறித்த கால வரையறைகளில் தேர்தல்கள் நடத்துதல்.
- குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளோருக்கு வேட்பாளராகும்/ வாக்காளராகும் உரிமை பாதுகாக்கப்படுதல்.
- வேட்பாளருக்கு/ வாக்காளருக்கு தேர்தல் கருமங்களில் சுயாதீனமாக செயற்படச் சந்தர்ப்பம் கிடைத்தல்.

**சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் அடிப்படையாகக் கொண்டு சனநாயகச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.**

- சனநாயக மக்கட் சமூகமொன்றில் சமத்துவமும் சுதந்திரமும் பேணப்படும் வகையில் ஆட்களுக்கு சனநாயகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குரிய வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல் வேண்டும். அவ்வாறான சில செயற்பாடுகள் உதாரணங்களாக கீழே தரப்பட்டுள்ளன.
  - தேர்தல்கள் நடத்துதல்
  - பொதுசன ஊடகப் பயன்பாடு
  - கருத்து வெளியிடுதல்
  - சட்டத்தின் முன்னிலையில் சமத்துவம்

**அரசியலமைப்பிற்கு அமைவாகச் செயற்படுதல்**

சனநாயக அரசொன்றில் அரசியலமைப்புக்கு அமைவாகச் செயற்படுவதால் கிடைக்கும் அனுகூலங்கள்

உதாரணம் :

- அரசியலமைப்பு நிறுவனங்கள் மற்றும் பிரசைகளின் உரிமைகள் போன்றவை தொடர்பாக ஆட்சியாளர், ஆளப்படுவோர் ஆகிய இரண்டு தரப்பினரும் அறிவூட்டம் பெறுதல்.
- அரசியலமைப்பில் ஒழுங்குமுறைமையும் உறுதிப்பாடும் காணப்படுதல்.
- பிரசைகள் தமது எதிர்பார்ப்புக்கள், மற்றும் தேவைகளை அரசியலமைப்பு நிறுவனங்கள் ஊடாக நிறைவேற்றிக்கொள்ள முயலுதல்.

**நீதித்துறைச் சுதந்திரம்**

சட்டத்தின் ஆதிபத்தியமும் சட்டத்தின் முன்னிலையில் சமத்துவமும்

**தரவுள்ளீடுகள்**

அரசியலமைப்பு 1978, சனநாயகம் பற்றிய கையேடுகள், ஆவணங்கள், தேர்தல் தொகுதி வரைபடம் (தேசப்படம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

சனநாயக ஆட்சியின் பண்புகள், சர்வ சனவாக்குரிமை, போட்டித்தன்மை வாய்ந்த கட்சி முறை, தேர்தல் தொகுதிகளை நிர்ணயம் செய்தல் பற்றி மாணவர் தெரிவிக்கும் கருத்துக்களும் தேர்தல் தொகுதிப் புறவுருவத் தேசப்படமொன்றைத் தயாரிப்பதிலும் வெளிப்படுத்தும் திறமையினடிப்படையில் கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி மட்டம்** :- **10.1.3 அரசுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான வேறுபாடுகளையும் பிரஜை கொண்டுள்ள பிரசைக்குரிய பொறுப்புக்களையும் ஒப்பிடுவார்.**

**பாடவேளைகள்** :- 16

**கற்றற் பேறுகள்** :-

- அரசு, அரசாங்கம் ஆகிய எண்ணக்கருக்களை வரைவிலக் கணங்களின் துணையுடன் விளக்குவார்.
- அரசினது தன்மையையும் அரசாங்கத்தினது தன்மையையும் விளக்குவார்.
- தேசிய அரசின் தன்மையை விளக்குவார்.
- ஒற்றையாட்சி மற்றும் கூட்டு அரசுகளின் அடிப்படைப் பண்புகளை ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாராய்வார்.
- அரசாங்கத்தின் பிரதான கூறுகளையும் அவற்றின் தொழிற்பாட்டையும் விளக்குவார்.
- பாராளுமன்ற ஆட்சி முறைக்கும் சனாதிபதி ஆட்சி முறைக்கும் இடையிலான வேறுபாட்டில் அவற்றின் அடிப்படையான இலட்சணங்களுக்கு இடையிலான வேறுபாடுகளையும் விசாரித்தறிவார்.
- சனநாயக மக்கட் சமூகமொன்றின் பிரசை என்ற வகையில் தமது பொறுப்புக்களை நன்கு விளங்கிச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கருத்துத்தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
அரசு, அரசாங்கம் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தல்

**அரசு**
**'**அரசு**'** என்பதை விளக்குதல், வரைவிலக்கணபப்டுத்துதல்.

**அரசின் பிரதான அம்சங்கள்**
தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதற்கிணங்க, பின்வரும் இலட்சணங்களைக் கொண்ட ஓர் அமைப்பை மாத்திரமே ஓர் அரசாகக் கொள்ளலாம்.

- திட்டவட்டமான நிலம்
- திட்டவட்டமான சனத்தொகை
- அரசாங்கம்
- இறைமையதிகாரம்

**அரசு, அரசாங்கம் ஆகியவற்றின் தன்மை**
உதாரணம் :

- நிலம், சனத்தொகை, அரசாங்கம், இறைமையதிகாரம் ஆகிய நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்படுதல்.

- ஒரு தேசத்துக்கு ஓர் அரசு எனும் எண்ணக்கருவின் மீது ஒழுங்கமைத்திருத்தல்.
- வாண்மை சார்ந்த பணிக்குழுவினால் ஆட்சி அதிகாரம் நடைமுறைப்படுத்தப்படுதல்.
- உள்வாரி, வெளிவாரி விடயங்கள் தொடர்பான இறைமையை அனுபவித்தல்.

**தேசிய, அரசின் தோற்றமும் வளர்ச்சியும்**
**தேசிய அரசு தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள்**
உதாரணம்:

- மானிய முறையின் வீழ்ச்சி
- முதலாளித்துவத்தின் தோற்றம்
- கிறித்தவ மறுசீரமைப்பு இயக்கம்
- கைத்தொழிற்புரட்சி
- மறுமலர்ச்சி
- சமய அடிப்படை - கிறிஸ்தவ மறுசீரமைப்பு இயக்கத்தின் மூலம் கிடைத்தமை
- அரசியல் அடிப்படை - போடின், மக்கியவலி, ஹொப்ஸ் போன்ற அரசியல் சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்ட புதிய கருத்துக்கள்.

**அரசின் வகிபாகம்**
உதாரணம்:

- சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்தல்
- சமூக மேம்பாட்டை ஏற்படுத்துதல்
- பொருளாதார முகாமைத்துவத்தை நெறிப்படுத்துதல்
- சமூக நலனோம்பு சேவை வழங்குதல்
- பொதுச்சேவைகளை வழங்குவதற்குரிய அடிப்படையான பொறுப்பை வகித்தல்.
  உதாரணம்: பொது அளவை நிறுவை, நாணய வெளியீடு, போக்குவரத்து, அஞ்சல், மருந்து, தகவல் சேவை, உட்கட்டமைப்பு வசதிகள்
- நீண்டகால பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தலும் நடைமுறைப் படுத்துதலும்.
- முரண்பாட்டை முகாமை செய்தல்
  (யுத்தம், கலகம், இன நெருக்கடி போன்றவற்றை தீர்ப்பதற்காக உள்வாரி, வெளிவாரி பாதுகாப்பை மனிதனுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதற்கு கடப்பாடுடைமை)
- இயற்கை அனர்தங்களின் போது கஷ்டத்துக்கு உள்ளானோருக்கு உதவி புரிதல். (வெள்ளம், வறட்சி, சூறாவளி, நில நடுக்கம். சுனாமி போன்றவை)

- **அரசுகளின் பிரதான இயல்புகள்**

  ஒற்றையாட்சி அரசொன்றில் இரண்டு பிரதான இலட்சணங்கள் உள்ளன.

  - மத்திய அரசின் மேன்மைநிலை
  - இறைமையுள்ள மேலதிக நிறுவனங்கள் இன்மை

**கூட்டரசுகள்**

கூட்டரசு முறையின் அடிப்படையான இலட்சணங்கள்

- அரச அதிகாரம் மத்திய அரசாங்கத்துக்கும் பிராந்திய அரசாங்கத்துக்கும் இடையே பகிரப்பட்டிருத்தல்.
- அதிகாரம் பகிரப்பட்டிருத்தல்.
- கூட்டரசுகளில் மத்திய, பிராந்திய என இரண்டு அதிகார மையங்கள் காணப்படுதல்.

**அரசாங்கம் - அறிமுகமும் வரைவிலக்கணமும்**

**அரசாங்கம் தொடர்பான வரைவிலக்கணங்கள்**

- ‘‘அரசின் விருப்பமானது நடைமுறையில் அரசாங்கத்தினால் செயலுருப்படுத்தப் படும்.’’
- ‘‘அரசாங்கம் என்பது அரசு அல்ல; மாறாக அதன் பிரதிநிதித்தவம் மாத்திரமே. அரசினால் விதிக்கப்படும் வேலை கூறுகளை அல்லது பொறுப்புக்களை செயலுருப் படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.’’
- அரசின் அல்லது பொதுமக்களின் விருப்பத்தை, கொள்கைகளை மாற்றுதல் மற்றும் அவற்றைச் செயலுருப்படுத்தும் அரசின் நடைமுறை அங்கமே அரசாங்கமாகும்.

**அரசாங்கத்தின் பிரதானமான கூறுகள்:**

உதாரணம்:
- சட்டத்துறை
- நிறைவேற்றுத்துறை
- நீதித்துறை

**சட்டத்துறையின் பணிகள்**

உதாரணம்:

- சட்டங்கள் நிறைவேற்றுதல்
- நிறைவேற்றதிகாரத்தைக் கட்டுப்படுத்துதல்
- நிதிக் கட்டுப்பாடு

**நிறைவேற்றுத்துறையின் பணிகள்**

உதாரணம்:

- அரச சேவையைக் கட்டுப்படுத்துதல்
- கட்டளைகள், ஆணைகள் பிறப்பித்தல்
- முப்படைகள், பொலிசு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல்
- வெளிநாட்டுத் தொடர்புகளைக் கட்டுப்படுத்துதல்.
- அரச கொள்கைகளைத் தீர்மானித்தலும் நடைமுறைப்படுத்துதலும்.

**நீதித்துறையின் பணிகள்**

உதாரணம்:

- சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்
- நீதி வழங்குதல்

- சட்டத்திற்கு விளக்கமளித்தல்
- பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்
- அரசியலமைப்பைப் பாதுகாத்தல்
- ஆலோசனைச் சேவைகள்

**அரசாங்க இயல்புகள்**

நவீன அரசுகளில் செயற்படும் அரசாங்கங்களின் பிரதானமான இரண்டு முறைமைகளாக சனாதிபதி முறையையும் பாராளுமன்ற முறையையும் குறிப்பிடலாம்.

பாராளுமன்ற மற்றும் சனாதிபதி ஆட்சி முறைகளுக்கு இடையிலான வேறுபாட்டை இனங்காண்பதற்காக பயன்படுத்தத்தக்க பிரதானமான இரண்டு முறைகள் உள்ளன.

1. நிறைவேற்று அதிகாரத்தைக் கையாளும் விதம்.
2. சட்டத்துறைக்கும் நிறைவேற்றதிகாரத்துக்கும் இடையிலான தொடர்பு.

**பாராளுமன்ற முறை**

உதாரணம் :

- பிரதமர் உட்பட அமைச்சரவையினாலேயே அதிகாரம் கையாளப்படும்.
- சட்டத்துறைக்கும் நிறைவேற்றத்திகாரத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு.
- சட்டத்துறைக்கு ஊடாக நிறைவேற்றதிகாரம் தெரிவு செய்யப்படும்.
- நிறைவேற்றதிகாரமானது, தமது நடவடிக்கைகள் தொடர்பாக, சட்டத் துறைக்கு கூட்டாகப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளது.
- சட்டத்துறையினால் நிறைவேற்றதிகாரத்தை பதவியிலிருந்து நீக்க முடியும்.

**சனாதிபதி முறை**

உதாரணம் :

- நிறைவேற்றதிகாரம் சனாதிபதியினால் கையாளப்படும்
- சட்டத்துறைக்கும் நிறைவேற்றதிகாரத்துக்கும் இடையே செய்மையான தொடர்பு காணப்படும்.
- சட்டத்துறையும், நிறைவேற்றதிகாரமும் ஒன்றிலிருந்து ஒன்று சுயாதீனமாகத் தெரிவு செய்யப்படும்.
- சட்டத்துறைக்கும் நிறைவேற்றதிகாரத்துக்கும் இடையே பரஸ்பர தங்கியிருப்பு கிடையாது.
- சட்டத்துறையினால், நிறைவேற்றதிகாரம் கட்டுப்படுத்தப்படுவது காணப்படுவதில்லை.
  உதாரணம்:
  அமெரிக்காவிலும் 1978 இன் பின்னர் இலங்கை யிலும் நடைமுறையிலுள்ள சனாதிபதிமுறை.

**பிரசையின் பொறுப்புக்கள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 28 ஆம் உறுப்புரையில் பிரசைகளின் அடிப்படை பொறுப்புக்கள் பற்றி 'அ' தொடக்கம் 'ஊ' வரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ) அரசியலமைப்பையும் சட்டத்தையும் போற்றிப் பாதுகாத்தல்.
(ஆ) தேசிய நலனை மேம்படுத்துதலும் தேசிய ஐக்கியத்தை வளர்த்தலும்.
(இ) தாம் தேர்ந்தெடுத்த முயற்சியை மனச்சாட்சியுடன் புரிதல்.
(ஈ) அரசாங்க ஆதனத்தைப் பேணிக்காத்தலும் பாதுகாத்தலும், அரசாங்க ஆதனம் பிழையான முறையில் பயன்படுத்தப்படுதலையும் வீணாக்கப்படுதலையும் தடுத்து நிறுத்துதலும்,
(உ) மற்றவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மதித்தல்; அத்துடன்
(ஊ) இயற்கையைப் பாதுகாத்தலும் அதன் செல்வங்களைக் காத்தலும்.

**பிரசையின் பொறுப்புக்கள்**

- சமாதானம் பேணுதலும் ஒற்றுமையை வளர்த்தலும்
- சமத்துவம்
- சட்டத்தின் நியாயத்தன்மை
- வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுதல்
- நியாயமான சமூக முறைமையொன்றினை உருவாக்குதல்.

**தரவுள்ளீடுகள்**

அரசியலமைப்பு 1978, அரசு, அரசாங்கம், தேசிய அரசு பற்றி விளக்கங்கள் மற்றும் வேறும் பொருத்தமான ஆவணங்கள், மற்றும் வேறும் பொருத்தமான ஆவணங்கள் புத்தகங்களைப் பயன்படுத்துக.

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

உரிய பாடவிடயங்கள் பூரணப்படுத்தப்படும் வண்ணம் பல்வேறு செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தி அதன்மூலம் கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி மட்டம்** :- **10.1.4 சனநாயகத்தின் இலட்சியங்களை உள்வாங்குவார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றுப் பேறுகள்** :-

- சனநாயக ஆட்சி வெற்றி அடைவதில் பங்களிக்கும் காரணிகளை விளக்குவார்.
- சமூகமொன்றின் நல்ல இருப்புக்காக சனநாயக ஆட்சி முறை முக்கியத்துவம் பெறும் விதத்தை நுணுகி நோக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- சனநாயக ஆட்சிமுறையொன்று வெற்றியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்
  - நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களை நடத்துதல்
  - சட்டத்தின் ஆதிபத்தியம் காணப்படுதல்
  - பகுத்தறிவுள்ள பொதுமக்கள் இருத்தல்
  - நல்ல பொருளாதார மட்டம் காணப்படுதல்
  - சுயாதீனமான பக்கச்சார்பற்ற பொதுசன ஊடகங்கள் காணப்படுதல்
  - சனநாயக வாழ்க்கை

**சனநாயக ஆட்சி முறையின் முக்கியத்துவம்**

உதாரணம் :

- ஒவ்வொரு பிரசைக்கும், மக்களினம், நிறம், சமயம், மொழி போன்ற பேதங் கருதாது சமமான உரிமைகள் உரித்தாதல்.
- தனியாளின் திறமைகள், ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ள வாய்ப்பளித்தல்.
- பிரசைகளுக்கு ஆட்சியில் பங்குகொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
- சர்வசனவாக்குரிமை மூலம் ஆட்சியாளர்கள் தெரிவு செய்யப்படுதல்.
- தேர்தலுக்காக, வேட்பாளராகப் போட்டியிடல்
- மனிதவள மேம்பாட்டுக்கு முன்னுரிமை கிடைத்தல்.
- அமைதிநேயச் சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படை உருவாக்கப்பட்டிருத்தல்.
- சமூக நலனோம்பல்

மேற்படி விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

**தரவுள்ளீடுகள்**

அரசியலமைப்பு (1978) - இலங்கை

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

சனநாயக ஆட்சிமுறையின் முக்கியத்துவம் பற்றிச் சுவர்ப்பத்திரிகைக்கு சிறு கட்டுரையொன்றை வரைய மாணவரை வழிப்படுத்தி மதிப்பீட்டை மேற்கொள்க.

## 10.2 அதிகாரத்தைப் பன்முகப்படுத்துதலும் பகிர்ந்தளித்தலும்

தற்கால அரசுகளில் காணப்படும் பன்மைத்தன்மை காரணமாகப் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன. தேசிய ஐக்கியத்தைப் பேணுதல், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல், சமதானத்தைப் பேணுதல் வினைத்திறனான ஆட்சி நடத்துதல், மக்களை அதிகமதிகமாக ஆட்சியில் பங்குகொள்ளச் செய்தல், அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல் போன்றவை அவற்றுள் முக்கியமானவை. அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பண்டைக்காலத்தில் மட்டுமன்றி தற்காலத்திலும் பல்வேறு உத்திகளைத் தேடியாய்வதில் புத்திசீவிகள் ஈடு பட்டுள்ளனர். அவ்வாறன ஓர் உத்தியாக, “அதிகாரத்தைப் பன்முகப்படுத்துதலும் அதிகாரத்தை பகிர்ந்தளித்தலும்” எனும் உத்தி தற்காலத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல், அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக்கருக்களை விளக்குதல் அதிகாரத்தைப் பன்முகப்படுத்துவதாலும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதாலும் அடைய எதிர்பார்க்கும் குறிக்கோள்கள் எவை, அவ்வாறான அதிகாரத்தைப் பன்முகப்படுத்தவும் பகிர்ந்தளிப்பதும் ஏன் என்பன பற்றிய எளிமையான விளக்கத்தை வழங்குவதே இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி 10.2** :- அதிகாரத்தைப் பன்முகப்படுத்துதல், அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக்கருக்கள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- **10.2.1 அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல், அதிகாரம் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக்கருக்கள் ஒப்பீட்டு ரீதியில் நோக்குவார்.**

**பாடவேளைகள்** :- 02


**கற்றற் பேறுகள்** :-

- ‘அதிகாரம்’ என்பது யாது என வரைவிலக்கணப்படுத்துவார்.
- அதிகாரத்தைப் பன்முகப்படுத்துதல் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக்கருக்களை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல், அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் ஆகிய எண்ணக் கருக்களை விளக்குதல்.
  - அதிகாரம் - விளக்கம்
- அதிகாரம் வெவ்வேறு வடிவங்களில் காணப்படுதல்
  - அரசியல் அதிகாரம்
  - நிருவாக அதிகாரம்
  - சமூக அதிகாரம்
  - பொருளாதார அதிகாரம்
- அதிகாரப் பரவலாக்கம்:
  - மத்திய அரசு, அதன் மையப்படுத்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து, திட்டமிடல், வளமுகாமை, வளங்களைப் பெறுதல், விநியோகித்தல், அவை தொடர்பான பொறுப்புக்களை, கீழ்மட்ட நிருவாக நிறுவனங்களுக்கும், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் மாகாண சபைகளுக்கும் அர்த்த சுயாதீன அரச அதிகார அமைப்புக்களை அல்லது யாக்கங்களுக்கு என்றவாறாக ஒப்படைத்தல்.

- அதிகாரப் பரவலாக்கத்தை வெவ்வேறு வழிகளில் செய்யலாம்.
  - மத்திய அரசின் பணிக்குழுவாட்சி முறையைப் பிரித்தல்.
    (நிருவாகப் பணிகளைப் பன்முகப்படுத்துதல்)
    உதாரணம் : இலங்கையில் நிருவாக அதிகாரங்களை தேசிய மட்டத்திலிருந்து பிரதேசமட்டம் வரையில் பன்முகப்படுத்தபட்டிருத்தல்.




- மத்திய அரசின் கருமங்களைப் பிரதேச கட்சி அலகுகளிடம் ஒப்படைத்தல்.
  உதாரணம்: இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ளமை
  (மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை)
- அரச முயற்சியாண்மைக்கு அன்றேல் அதிகார சபைக்கு உரிய அதிகாரங்களை ஒப்படைத்தல்.
  - பல்வேறு அரச முயற்சியாண்மைகளை நெறிப்படுத்துவதற்காக வெவ்வேறு திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகளுக்குத் தேவையான அதிகாரங்களை ஒப்படைத்தல்.
- அரசின் நிருவாகப் பணிகளை ஒரு மைய நிலையத்திலிருந்து ஆற்றுவதற்குப் பதிலாக அப்பணிகளை மத்திய அரசினால் வகுக்கப்படும் தேசியக் கொள்கைகள், திட்டங்கள், இணக்கப்பாடுகளின்படி, பிரதேச அலகுகள் மூலம் ஆற்ற ஆவன செய்வதே பன்முகப்படுத்துவதன் மூலம் கொள்ளப்படுவதாகும்.
- அதற்கமைய, அதிகாரப் பன்முகப்படுத்தலின் போது நிகழுவது மத்திய அரசு வசமுள்ள நிருவாக அதிகாரம் அப்பால் பிரிந்து செல்லலாகும்.

- **அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல்**
  உதாரணம்: - ஐக்கிய அமெரிக்கக் குடியரசு
  - கனடா
  - சுவிட்சர்லாந்து

  இவ்வாறான அதிகாரப் பகிர்வுடன் செயற்படும் ஆட்சி முறை கூட்டாட்சி முறை எனப்படும்.

**தரவுள்ளீடுகள்**

அதிகாரப் பரவலாக்கமும் அதிகாரப் பகிர்வும் பற்றிய விளக்கங்களைக் கொண்ட ஆவணங்கள், ஏடுகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

மாணவர்கள் அதிகாரப் பரவலாக்கமும் அதிகாரப் பகிர்வும் பற்றிய எண்ணக்கருக்களை சரியாகப் பொருள் விளக்கம் செய்வதிலும் கொண்டுள்ள திறமையைக் கருத்திற் கொண்டு கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி மட்டம்** :- **10.2.2 அதிகாரத்தைப் பன்முகப்படுத்தும் அலகுகளின் கட்டமைப்புக்கள், அதிகாரங்கள், கருமங்களைத் தேடியாய்வார்.**

**பாடவேளைகள்** :- 05

**கற்றற் பேறுகள்** :-

- அதிகாரத்தைப் பன்முகப்படுத்தும் அலகுகளைப் பெயரிட்டு அவற்றின் அமைப்புக்களை விளக்குவார்.
- அதிகாரத்தைப் பன்முகப்படுத்தும் அலகுகளின் அதிகாரங்களையும் பணிகளையும் விளக்குவார்.
- நவீன அரசுகளில் அதிகாரத்தைப் பரவலாக்குவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகளை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- இலங்கையில் அதிகாரத்தைப் பன்முகப்டுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள அலகுகள்
  - இலங்கையில் அதிகாரத்தைப் பன்முகப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள அலகுகள் 3 ஆகும்.
  - தற்போதைய அரசியல் யாப்பின் 13ஆம் திருத்தத்தின் மூலம் இந்த அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளன.
    - மத்திய அரசு
    - மாகாண சபைகள்
    - உள்ளூராட்சி நிறுவனங்கள்
- அவ் அமைப்புக்களின் அதிகாரங்களும் பணிகளும்
  - மத்திய அரசின் அதிகாரங்களும் பணிகளும்
  - மத்திய அரசு பிரதானமான (3) நிறுவனங்களைக் கொண்டது. அவை யாவன
    - நிறைவேற்றுத்துறை - சட்டத்துறை - நீதித்துறை
- இம் மூன்று நிறுவனங்களின் அதிகாரங்களையும் கருமங்களையும் பின்வருமாறு காட்டலாம்.

| நிறைவேற்றுத்துறையின் அதிகாரங்களும் கருமங்களும் | சட்டத்துறையின் அதிகாரங்களும் கருமங்களும் | நீதித்துறையின் அதிகாரங்களும் கருமங்களும் |
|---|---|---|
| உதாரணம்:<br>1. அரசின் தலைமைத்துவம்<br>2. அரசாங்கத்தின் தலைமைத்துவம்<br>3. நிறைவேற்றுத்துறையில் தலைவராதல்<br>4. ஆயுதப்படைகளின் கட்டளையிடும் தலைமை யாதல் | உதாரணம்:<br>1. சட்டத்தைப் பிறப்பித்தல்<br>2. வரவு செலவுததிட்டத்தை நிறைவேற்றுதல்<br>3. நிறைவேற்றுத்துறை யைக் கட்டுப்படுத்துதல்<br>4. முக்கியமான சட்ட வரைவுகளை முன்வைத் தலும் நிறைவேற்றலும்.<br>5. பொதுமக்களின் குறை பாடுகளைக் கலந்துரை யாடுதல். | உதாரணம்:<br>1. வழக்குத் தீரப்பு செய்தல்<br>2. அடிப்படை உரிமை களைப் பாதுகாத்தல்.<br>3. சட்டங்களுக்குப் பொருள் விளக்கமளித்தல்.<br>4. சட்டவரைவுகளின் யாப் புக்கமைவான தன்மை யைப் பரிசீலித்தல் |

- நவீன அரசுகளில் அதிகாரத்தைப் பன்முகப்படுத்துவதற்குரிய காரணங்கள்.
    - மத்திய அரசின் நிர்வாகப் பணிகளை இலகுபடுத்திக்கொள்ளல்.
    - மத்திய அரசின் அதிகாரங்களைப் பிரதேச ரீதியில் ஒப்படைத்தல்.
      உதாரணம்: - மாவட்டச் செயலகம்
      - பிரதேச செயலகம்
    - பிரதேச ரீதியில் ஆட்களை ஆட்சிக் கருமங்களில் பங்குபற்றச் செய்தல்.
    - பிரதேச அபிவிருத்தியைத் துரிதப்படுத்துதலும், பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தலும்.
    - பிரதேச வளங்களைக் கொண்டு உச்ச பயன் பெறுதல்
    - பொதுமக்களின் நாளாந்தத் தேவைகளை இலகுவாக நிறைவு செய்து கொள்ளச் சந்தர்ப்பமளித்தல்.
      உதாரணம்: - பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் வழங்குதல்.
      - வாகனப் பதிவுச் சான்றிதழ் வழங்குதல்.

**தரவுள்ளீடுகள்**
இலங்கையில் அதிகாரப் பன்முகவாக்கம் செய்யப்பட்டுள்ள விதத்தைக் காட்டும் பொருத்தமான தேசப்படம் (மாகாணங்களைக் காட்டும் தேசப்படம்), மத்தியரசு, மாகாண சபைகள் பற்றிய விபரக் கையேடுகள், அதிகாரங்களையும் பணிகளையும் காண்பிக்கும் குறிப்புக்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**
செயற்பாடுகளில் மாணவர் காட்டும் துலங்கல்களுக்கேற்ப கணிப்பீடு மதிப்பீட்டை மேற்கொள்க.

**தேர்ச்சி மட்டம்** :- **10.2.3 அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகளின் கட்டமைப்பு, அதிகாரங்கள், கருமங்களைத் தேடியாய்வார்.**


**பாடவேளைகள்** :- 05

**கற்றற் பேறுகள்** :-

- அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகளைப் பெயரிடுவார்.
- அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகளின் சட்ட அமைப்பை விளக்குவார்.
- அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அலகுகளின் அதிகாரங்களையும் கருமங்களையும் நுணுகியாய்வார்.
- நவீன அரசுகளில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான காரணங்களை நுணுகியாய்வார்.
- தற்கால அரசுகளில் அதிகாரத்தைப் பன்முகப்படுத்துவதன் அல்லது பகிர்ந்தளிப்பதன் அவசியத்தை நுணுகியாய்வார்.
- எமது நாட்டில் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அதிகாரம் பகிர்ந்தளிப்பு வரலாற்றைத் தேடியாய்வார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் கட்டமைப்புக்கள்




- கூட்டாட்சி அரசுகளில் அரசியல் யாப்பின் மூலம் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும்.
- கூட்டாட்சி அரசில், ஒரு மத்திய அரசும் சில பிராந்திய அரசுகளும் காணப்படும்.
- அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்காக, கூட்டாட்சி அரசுகளில் மூன்று பிரதானமான முறைகள் பின்பற்றப்படும்.
  - மத்திய அரசின் அதிகாரங்களைக் குறிப்பிடுவதோடு, மீதியான சகல அதிகாரங்களும் பிராந்திய அரசுகளிடம் ஒப்படைத்தல்.
- பிராந்திய அரசின் அதிகாரங்களைக் குறிப்பிடுவதோடு, மீதியான சகல அதிகாரங்களையும் மத்திய அரசிடம் ஒப்படைத்தல்.
- பிராந்திய அரசின் அதிகாரங்களையும், பிராந்திய அரசுகளின் அதிகாரங் களையும் குறிப்பிட்டு, மீதியான சகல அதிகாரங்களையும், இணைப்பட்டியலொன்றின் கீழ், அந்த இரண்டு நிறுவனங்களிடமும் ஒப்படைத்தல்.

- மேற்படி, முறைகளுள் ஒரு முறையைப் பயன்படுத்தி, கூட்டரசுகள் தமது அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும்.

- **மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள்:**

உதாரணம்:- தேசிய பாதுகாப்பு தொடர்பாக அதிகாரங்கள்
- வெளிநாட்டு அலுவல்கள் தொடர்பான அதிகாரங்கள்
- முப்படைகளை நெறிப்படுத்தல்
- நிதிக்கட்டுப்பாடு
- தேசிய மட்டத் தேர்தல்கள் நடத்துதல்.

- **பிராந்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள்:**

உதாரணம்: - பிராந்திய தேர்தல்கள் நடத்துதல்
- பிராந்திய நீதித்துறைக் கருமங்கள்
- அடித்தளக் கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- பொதுமக்களுக்குப் பயன்தரும் சேவைகளை நடத்திச் செல்லல்.

- **நவீன அரசுகளின் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான காரணங்கள்**

உதாரணம்: - பல்வேறு சாதி, சமய, இனக் குழுக்களாலான அரசு இருத்தல்.
- பொருளாதார வேறுபாடுகள்
- நிலப்பிரப்பின் விஸ்தீரணம்
- அரசாட்சி நடவடிக்கைகளில் பங்குகொள்ள அதிகமானோருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
- பிரதேச ரீதியில் காணப்படும் வளங்களைக் கொண்டு உச்ச பயன் பெறுதல்.

- **இலங்கையில் அதிகாரப் பன்முகப்படுத்தல் மற்றும் அதிகார பகிர்வு வரலாறு:**

உதாரணம்: - உருகுணை, மாயா, பிகிட்டி என மூன்று நிருவாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தமை
- அனுராதபுர, பொலனறுவை இராசதானிக் காலங்களில் அரசர் களால், "ஆப்பா", "மாப்பா" என்றவாறாக பிரதேச ஆட்சியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தமை
- அடித்தளக் கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப்பட்டமை
- மேற்கத்தேயர் இலங்கைக்கு வருகை தந்த காலப்பகுதியில் மலைநாடு, கோட்டே, யாழ்ப்பாணம் என அரசர்கள் காணப்பட்டமை

- **இலங்கையில் அதிகாரப் பன்முகப்படுத்தல் தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகள்**

உதாரணம்: - 1972 மாவட்ட அரசியல் அதிகார அமைப்பு முறை
- 1972 வரவு செலவுத் திட்டத்தைப் பன்முகப்படுத்துதல்
- 1978 மாவட்ட அமைச்சர் முறை
- 1980 மாவட்ட அபிவிருத்திச் சபை

- **இலங்கையில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் பலவாகும். அவ்வாறாக பகிர்வதற்காக எடுக்கப்பட்ட சில முயற்சிகள் வருமாறு:**

உதாரணம்:
- 1931 - டொனமூர் ஆணைக்கழுவின் பிரேரணைகள்
- 1952 - சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் முன்வைத்த பிரேரணைகள்
- 1959 - பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் மூலம் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்
- 1965 டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தம்
- 1987 - மாகாண சபை முறை தோற்றுவிக்கப்பட்டமை
- 1989 - சனாபதித் தேர்தலின் போது சிரிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் முன்வைத்த பிரேரணைகள்
- 1994 - காமினி திசாநாயக்க அவர்கள் முன்வைத்த பிரேரணைகள்- 1997 - பொதுசன ஐக்கிய முன்னணி முன்வைத்த பிரேரணைகள்
- 2000 - சந்திரிகா பண்டாரநாயக்க அவர்கள் முன்வைத்த தீர்வுப் பொதி

**தரவுள்ளீடுகள்**

1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (13வது திருத்தத்துடன்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

அதிகாரப் பன்முகைப்படுத்தல் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் பற்றி மாணவர்களுடனான கலந்துரையாடலின் போது காண்பித்த துலங்கல்களைக் கருத்திற் கொண்டு பொருத்தமான நியதிகளை அடிப்படையாகக் கொண்டு, கணிப்பீடு, மதிப்பீட்டை மேற்கொள்ளவும்.

**தேர்ச்சி மட்டம்** :- **10.2.4 நவீன அரசுகளில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதன் அவசியத்தை மதிப்பார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- அமெரிக்க ஐக்கிய குடியரசு, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளில் அதிகாரம் பகிரப்பட்டமைக்கான காரணங்களைக் கலந்துரை யாடுவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் கூட்டமைப்பு ரீதியான வேறுபாடுகள்
  உதாரணம்: அமெரிக்க ஐக்கியக் குடியரசு
  சுவிற்சலாந்து
- ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, கூட்டு அரசாக உருவாகியமைக்கான காரணங்கள் (பாடநூலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் துணையாகக் கொள்க.)
  - சுவிட்சர்லாந்து கூட்டரசாக உருவாகியமைக்கான உதாரணங்கள் (பாடநூலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை துணையாகக் கொள்க.)

**தரவுள்ளீடுகள்**
அமெரிக்க ஐக்கிய குடியரசு மற்றும் சுவிட்சர்லாந்து பற்றிய தகவல்களடங்கிய செயற்பாட்டுப் பத்திரம், இணையத்தளத்திலிருந்து பெற்றுக் கொண்ட உரிய தகவல்கள், அமெரிக்க ஐக்கிய குடியரசு மற்றும் சுவிட்சர்லாந்தைக் காட்டும் உலப் புறவுருவப்படம்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**
அமெரிக்க ஐக்கிய குடியரசு மற்றும் சுவிட்சர்லாந்தில் அதிகாரப் பகிர்வுக்கான காரணங்கள் பற்றிய சிறுநூல் ஒன்றை மாணவரை தயாரிக்க வழிப்படுத்தி பொருத்தமான நியதிகளைக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை மேற்கொள்க.

## 10.3 பல்பண்பாட்டுச் சமூகம்

தற்காலச் சமூகம் மிகவும் சிக்கார்ந்தது. பொருளாதார, சமூக, அரசியல், பண்பாட்டுக் காரணிகள் இதில் பங்களிப்புச் செய்துள்ளன. அத்தோடு, புவியியல் காரணிகளும் புலப் பெயர்வு, படையெடுப்பு போன்ற காரணிகளும் இதில் பங்களிப்புச் செய்துள்ளன. எனவே தற்கால சமூகம் பல மக்களினங்கள், பல தொழில்கள், பல சமயங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்ற வேறுபாடுகளையும் கொண்டது. இவ்வாறான பல்வகைமை கொண்ட சமூக முறைகளை, சமூகவியலாளர்கள், பல்பாண்டு சமூகங்கள் என வரையறுத் துள்ளனர். பல்பண்பாட்டுச் சமூகமொன்றில் வாழும் வெவ்வேறு மக்கட் பிரிவினர், தமது தனித் துவத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்களுக்கான சிறப்பான பழக்கவழக்கங்கள், மொழிகள், சமயங்கள், நம்பிக்கைகள், பாரம்பரியங்கள், விருப்பு வெறுப்புக்கள், போன்ற வற்றைப் பேணிவருவர். எனவே ஒரு நாட்டின் பண்பாடு பல்தன்மை கொண்டதாக அமைய இடமுண்டு. அவ்வாறான பல் பண்பாட்டைக் கொண்ட சமூகம், 'பல்பண்பாட்டுச் சமூகம்' எனப்படுகின்றது. பல்பண்பாட்டுச் சமூகமொன்று பற்றிய தெளிவான விளக்கத்தை வழங்குவதும், அவ்வாறான சமூகமொன்றில் முரண்பாட்டு நிலைமைகள் ஏற்படாதவாறு பரஸ்பர ஒத்துழைப்புடன் சமாதானமாக வாழ்வதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவதற்குத் துணையாகும் தேர்ச்சிகளைக் கொண்ட பிரசைகளை உருவாக்கு வதுமே இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

**தேர்ச்சி** :- பல்பண்பாட்டுச் சமூகமொன்றில் சமாதான நேயத்துடன் நற்பிரஜையாகவும் வாழ்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- **10.3.1 பல் பண்பாட்டுச் சமூகத்தின் இயல்புகளை நுணுகியாய்வார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-


- பல்பண்பாட்டுச் சமூகம் என்பதை விளக்குவார்.
- பல்பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படை இயல்புகளை விவரிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- ''சமூகம்'' என்பதை விளக்குவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பல்வேறு வரைவிலக்கணங்கள்.
- ''பண்பாடு'' அறிமுகம்
- ''பல் பண்பாட்டுச் சமூகம்'' எனும் எண்ணக்கரு பற்றிய விளக்கமும் அதன் அடிப்படை இயல்புகளும்
  (இந்த ஆசிரியர் வழிகாட்டியில், எமது நாடு தொடர்பாக சில உதாரணங்கள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளன. பல்பண்பாட்டுச் சமூகம் காணப்படும் நாடுகளுக்கு உதாரணங்களாக இந்தியா, அமெரிக்க ஐக்கியக் குடியரசு போன்ற நாடுகளின் பண்பாட்டுப் பல்வகைமை பற்றிய தகவல்களைத் தேடியறியுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்).
- பல்பண்பாட்டுச் சமூகமொன்றின் அடிப்படை இயல்புகள்.
  உதாரணம்:
  - வெவ்வேறு மக்களினங்கள் வாழ்தல்
  - வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றுவோர் இருத்தல்

- வெவ்வேறு மொழி பேசுவோர் இருத்தல்
- வெவ்வேறு மக்களினங்கள், வெவ்வேறு சமயங்களுடன் இணைந்த பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள் காணப்படும்.
- பிரதேச ரீதியில் பல்வகைமையைக் கொண்டிருத்தல்.

**பல்பண்பாட்டுச் சமூகமொன்றின் அடிப்படை இயல்புகள் (இலங்கையை அடிப்படையாகக் கொண்டு)**




- வெவ்வேறு மக்கட்பிரிவினர் மற்றும் சமயங்கள் சார்ந்த வெவ்வேறு பழக்க வழக்கங் களும் சம்பிரதாயங்களும்
  - பௌத்த பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும்
  - இந்து பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும்
  - இஸ்லாமிய பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும்
  - கிறித்தவப் பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும்

- பிரதேசப் பல்வகைமை
  - மலைநாடு/ மலையகம்
  - தாழ்நாடு
  - ராஜரட்டை

**தரவுள்ளீடுகள்**

இலங்கையின் இனப்பரம்பல் பற்றிய புள்ளிவிபரங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

இலங்கையின் இனப்பரம்பலை அடிப்டையாகக் கொண்டு பல்பண்பாட்டுச் சமூகம் கட்டியெழுப்பப்பட்டுள்ள விதம் தொடர்பில் மாணவர் காடடும் துலங்கல்களுக்கேற்ப கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி மட்டம்** :- **10.3.2** பல் பண்பாட்டு மக்கட் சமூகமொன்று தோன்றுவதில் பங்களிப்புச் செய்யும் காரணங்களைத் தேடியறிவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- பல்பண்பாட்டுச் சமூகமொன்று தோன்றுவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகளை விவரிப்பார்.
- தற்கால இலங்கையில் பல்பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் வணிகமும் ஊழியப்படை தாபிக்கப்பட்டமையும் பங்களிப்புச் செய்துள்ள விதத்தையும் விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- பல் பண்பாட்டுச் சமூகமொன்று தோன்றுவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகள்
  - அமைவிடம்
  - இடம்பெயர்வு
  - படையெடுப்பு
  - பல்வேறு நாட்டவர்கள் வணிகத்துக்காக வருதல்
  - ஊழியர்களைத் தருவித்தல்

**தரவுள்ளீடுகள்**

உரிய காணொளிக் காட்சிகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

இலங்கையைப் போன்று பல்பண்பாட்டுச் சமூக இயல்புகளைக் கொண்டுள்ள வேறு நாடுகளின் தகவலக்ளைச் சேகரித்து வகுப்பறையில் முன்வைக்க வசதியளித்து அதன்மூலம் கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க. இதனைக் குழுச் செயற்பாடாக மேற்கொள்ள இடமளிக்கவும்.

**தேர்ச்சி மட்டம்** :- **10.3.3** பல் பண்பாட்டுச் மக்கட் சமூகத்தின் இருப்புக்காக நல்லாட்சியின் முக்கியத்துவத்தை நுணுகி நோக்குவார்.

**பாடவேளைகள்** :- 04

**கற்றற் பேறுகள்** :-

- நல்லாட்சி என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- நல்லாட்சியின் இயல்புகளைக் கலந்துரையாடுவார்.
- பல்பண்பாட்டு மக்கட் சமூகத்தின் இருப்பை நல்லாட்சியினூடாக உறுதிப்படுத்தும் விதத்தை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- நல்லாட்சி அறிமுகம்
- நல்லாட்சியின் இயல்புகள்
  - ஊழலோ, நேர்மையீனமோ அற்ற ஆட்சியும் நிருவாகமும்
  - நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடத்துதல்
  - நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
  - உரிமைகளைப் பாதுகாத்தலும் உறுதிப்படுத்துதலும்
  - ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
  - அர்ப்பணிப்புடன் செயற்படுதல்
  - சட்டத்தின் ஆதிபத்தியத்துக்கு மதிப்பளித்தல்
  - வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுதல்
  - தனியாட்கள் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுதல்
- நல்லாட்சிக்காக, ஒவ்வொருவரதும் அரசியல், சமூக, பொருளாதார பண்பாட்டுத் தனித் துவத்தை மதிப்பதன் முக்கியத்துவம்
  - அவரவரது அரசியல் தனித்துவத்தை மதித்தல்
  - அவரவரது சொந்த தனித்துவத்தை மதித்தல்
  - அரசியல் தலைமைத்துவத்தை மதித்தல்
  - அரசியல் தீர்மானங்களை எடுக்கும் வேளையில் சுயாதீனமாகச் செயற்படல்
  - அத்தீர்மானங்கள் ஏனையோருக்குத் தீங்கிழைக்காதிருத்தல்
- பல்பண்பாட்டு மக்கட் சமூகத்தின் இருப்புக்கு நல்லாட்சியின் அவசியம்

  உதாரணம்:-
  - அரசியல் யாப்பை மிக மேலானதாகக் கருதுதலும் அதற்கு அமைவாக ஆட்சியை நடத்திச் செல்லலும்.
  - சட்டத்தின் ஆட்சியைச் செயற்படுத்துதல்
  - தனிமனிதன் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்
  - சமத்துவத்தைப் பேணுதல்
  - பேச்சுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்
  - வெளிப்படைத்தன்மை இருத்தல்
  - பங்குபற்றலுக்கான உரிமையை ஏற்றுக்கொள்ளல்
  - அடிப்படை உரிமைகளை மதித்தலும் பாதுகாத்தலும்
  - இலஞ்சமும் ஊழலும் இல்லாதிருத்தல்
  - பொதுசன ஊடக சுதந்திரம் இருத்தலும் உண்மையான தகவல்களை அறியும் சந்தர்ப்பம் இருத்தலும்.

**தரவுள்ளீடுகள்**

தயாரித்துள்ள பாடத்திற்கமைவான தரவுள்ளீடுகளைத் தடுத்துக் கொள்ளவும்.

இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பொருத்தமான நியதிகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு படத்தின் இறுதியிலும் வகுப்பறையில் கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி மட்டம்** :- **10.3.4** பல் பண்பாட்டுச் மக்கட் சமூகத்தின் வாழ்வதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.

**பாடவேளைகள்** :- 05

**கற்றற் பேறுகள்** :-

- நவீன அரசுகள் பலவற்றில் பண்பாட்டுச் சமூக இயல்புகள் காணப்படுகின்றமையை விளக்குவார்.
- பல்பண்பாட்டுச் சமூகமொன்றில் நல்ல இருப்புக்காக பிரசைகள் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்புகளை விளக்குவார்.
- பல்பண்பாட்டுச் சமூக உறுப்பினர் என்ற வகையில் கூட்டாக வாழ்வதன் தேசிய முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- பல்பண்பாட்டுச் சமூகமும் தற்கால அரசுகளும்
  - நவீன பிரயோகத்தின்படி, நிலம், சனத்தொகை, அரசாங்கம், இறைமையதிகாரிகளும் ஆகியவற்றைக் கொண்ட அமைப்பை அரசு எனக் கருதலாம்.
  - பெரும்பாலான நவீன அரசுகளைப், பல மக்கட் பிரிவினரைக் கொண்டமைந்துள்ளமையால், அவர்களுக்கேயுரிய பண்பாடுகளைக் காணலாம். அவ்வாறான பண்புக்கூறுகளைக் கொண்ட அரசுகளைப் பல்பண்பாட்டு மக்கட் சமூகங்கள் எனக் குறிப்பிடலாம்.
- பல்பண்பாட்டுச் சமூகமொன்றின் நல் இருப்புக்காக பிரசையொருவர் விருத்தி செய்துகொள்ள வேண்டிய பண்புகள்.

  உதாரணம்:
  - ஏனையோரின் கருத்துக்களைப் பொறுத்தலும், நன்கு செவிமடுத்தலும்.
  - ஏனையோரின் கருத்துக்களை மதித்தல்.
  - ஏனைய சமயங்களை இழிவுபடுத்தாதிருத்தல்.
  - ஏனைய பண்பாடுகள் தொடர்பான அருஞ் செல்வங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.
  - ஒருவருக்கொருவர் பரஸ்பரம் மதிப்பளித்தல்.
  - விட்டுக்கொடுக்கும் தன்மையையும் சகவாழ்வையும் விருத்தி செய்தல்.
  - ஏனைய மொழிகளைக் கற்றல்
  - சமத்துவத்துடன் செயற்படல்

- பல்பண்பாட்டுச் சமூகமொன்றின் உறுப்பினர்கள் என்ற வகையில் கூட்டாக வாழ்வதன் முக்கியத்துவம்.
  உதாரணம்:
  - தேசிய ஒற்றுமையையும் சக வாழ்வும் விருத்தியடைதல்.
  - முரண்பாடுகளை இயன்ற அளவுக்கு குறைத்தலும் பரஸ்பர நல்லிணக்கமும் நம்பிக்கையும் வளர்ச்சியடைதலும்.
  - ஒரு தேசம் ஒரு நாடு (One nation, One counrty) எனும் உணர்வை பிரசைகளிடம் விருத்தியடையச் செய்தல்
  - தனி மனிதச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுதலும், சனநாயகம் பாதுகாக்கப்படுதலும்.
  - நாட்டின் அபிவிருத்திக்காக எந்தவொரு பிரசையும் வேலை செய்தலும் அதனை ஒரு தேசிய கடமையாகக் கருதிச் செயற்பட முனைதலும்.
  - ஏனைய சமயங்கள், பண்பாடுகளை இழிவுபடுத்தாத வகையில் நடந்துகொள்ளல்.

**தரவுள்ளீடுகள்**

உலக நாடுகள் பிரிக்கப்பட்டுள்ள தேசப்படம், இலங்கையின் மாகாணம், நிருவாக, மாவட்டங்களைக் குறித்துக் காட்டப்பட்டுள்ள தேசப்படம்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பல்பண்பாட்டுச் சமூகத்தில் ஒற்றுமையாக வாழ்வதன் முக்கியத்துவம் பற்றி மாணவருடன் கலந்துரையாடி, அதற்கான துலங்கல்களினடிப்படையில் கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

## 10.4 பொருளாதார முறைகளும் பொருளாதார தொடர்புகளும்

பொருளாதார முறைகள் மற்றும் பொருளாதாரத் தொடர்புகள் பற்றிப் பயிலும் போது உலகின் எல்லாப் பொருளாதாரங்களும் வளப்பற்றாக்குறையை எதிர்கொள்ள நேர்ந்துள்ளமையைக் காணமுடிகின்றது. உற்பத்திச் செய்முறையில் மட்டுமன்றி, நுகர்வுச் செய்முறையில் இப்பற்றாக்குறையானது ஒரு பிரச்சினையாகக் காணப்படுகின்றமையால், தர்க்க ரீதியாகத் தீர்மானமெடுக்கும் தேவையுள்ளது.

வளப்பற்றாக்குறை மட்டுமன்றி, பொருளாதாரப் பிரச்சினைகளும் தற்காலத்தில் எல்லா நாடுகளுக்கும் பொதுவான பிரச்சினையாகக் காணப்படுகின்றன. எனவே வெவ்வேறு நாடுகள் வெவ்வேறு முயற்சிகளினூடாக இப்பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முனைந்துள்ளமையையும் காணமுடிகின்றது. தற்காலத்தில் பல்வேறு பொருளாதார முறைகள் தோன்றுவதற்கும் இம்முயற்சிகள் காரணமாகியுள்ளன. சமூகத்தில் நிகழும் மாற்றங்களும் இப்பொருளாதார முறைகளும் காலத்துக்கேற்ப மாற்றமடைதலும் வீழ்ச்சியடைவதும் உண்டு.

தற்காலத்தில் தொடர்பாடல் தொழினுட்பத்துறையிலும் விஞ்ஞானத்துறையிலும் நிகழும் துரித மாற்றங்களும் காரணமாக சமூகத் தொடர்புகள் விரிவடைந்து செய்வதைக் காண முடிகின்றது. உலகமயமாக்கல் என அழைக்கப்படும் இச்செய்முறை காரணமாக உலகப் பொருளாதாரத்தில் ஏற்படும் நேர் மற்றும் மறை முகச் சேவைகள் தொடர்பாகவும் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது.எதிர்கால அறைகூவல்களை வெற்றி கரமாக எதிர்கொள்வதனூடாக பேண்தகு அபிவிருத்திக்காகப் பங்களிப்புச் செய்யத்தக்க மாணவ சந்ததியொன்றினைத் தோற்றுவிப்பதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

**தேர்ச்சி** :- இலங்கை எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளின் பால் விசேட கவனஞ் செலுத்தி, பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 10.4.1 **அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளையும் செயற்பாடுகளையும் நுணுகியாய்வார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- ‘பொருளாதார முறை’ என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பொருளாதாரமொன்று எதிர்கொள்ளும் அடிப்படையான பிரச்சினைகளை விளக்குவார்.
- உற்பத்திக் காரணிகளையும் அவற்றுக்காகச் செய்யும் செலவுகளையும் விளக்குவார்.
- பொருளாதார முறைமையொன்றினால் ஆற்றப்படும் அடிப்படைப் பொருளாதாரச் செயற்பாடுகளை விவரிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

“பொருளாதார முறை” - வரைவிலக்கணமும், விளக்கமும்

- அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை இனங்காணல்.
  1. எதனை எந்த அளவு உற்பத்தி செய்தல் வேண்டும்?

2. எவ்வாறு உற்பத்தி செய்தல் வேண்டும்?
3. யாருக்காக உற்பத்தி செய்தல் வேண்டும்?

- பொருளாதாரமொன்றில் நிகழும் செயன்முறை

  பொருளாதாரமொன்றில் நிகழும் அடிப்படையான பணிகள் மூன்றாகும்.
  - உற்பத்தி
  - விநியோகம்
  - நுகர்வு

- உற்பத்தி
  - விவசாய உற்பத்திகள்
    உதாரணம்: நெல், காய்கறி, பழவகை, மீன், முட்டை
  - கைத்தொழில் உற்பத்திகள்
    உதாரணம்: மண்ணெண்ணெய், துணி, மோட்டார் கார்
  - சேவைகள்
    உதாரணம் : கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, அஞ்சல்

  உற்பத்தி செய்த பண்டங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
  1. நுகர்வுப் பண்டங்கள் : அரிசி, பால்மா, பருப்பு, சீனி
  2. இடைநிலைப்பண்டங்கள் : கனியநெய், பசளை, இரசாயனப் பதார்த்தங்கள், புடைவை
  3. மூலதனப்பண்டங்கள்: இயந்திர சாதனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், கட்டிடப்பொருள்கள்.

- விநியோகம்:
  - விநியோகமானது மொத்தவியாபாரம், சில்லறை வியாபாரம் என இரண்டு வகைப்படும்.
    மொத்த வியாபாரம் - மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையே நிகழும்.
    சில்லறை வியாபாரம் - சில்லறை வியாபாரிக்கும் நுகருவோருக்கும் இடையே நிகழும்.

- நுகர்வு
  - பண்டங்களையும் சேவைகளையும் பயன்படுத்தி, மனிதனின் தேவைகளை நிறைவு செய்து கொள்ளுதல் நுகர்வு ஆகும்.

**தரவுள்ளீடுகள்**
இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை, பொருளியல் நோக்கு சஞ்சிகை

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பொருளாதார முறைமையொன்றில் நிகழும் செயன்முறைகள் பற்றிய தகவல்களைக் கொண்ட சுவர்ப்பத்திரிகைக் கட்டுரையொன்றைத் தயாரிக்க மாணவரை வழிப்படுத்துவதன் மூலம் கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி மட்டம்** :- **10.4.2 வெவ்வேறு பொருளாதார முறைகள் தொடர்பான தகவல்களைத் தேடியாய்வார்.**

**பாடவேளைகள்** :- 05

**கற்றற் பேறுகள்** :-

- உலகில் உள்ள வெவ்வேறு பொருளாதார முறைகளைக் குறிப்பிடுவார்.
- வெவ்வேறு பொருளாதார முறைகளின் அடிப்படை இயல்புகளைப் பகுத்தாராய்வார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- வெவ்வேறு பொருளாதார முறைகளை இனங்காணல்.
  - முதலாளித்துவப் பொருளாதார முறை
  - சமவுடைமைப் (சமதர்மம்) பொருளாதார முறை
  - கலப்புப் பொருளாதார முறை

| பொருளாதார முறை | அடிப்படை இயல்புகள் | காணப்படும் நாடுகள் -உதாரணம் |
|---|---|---|
| முதலாளித்துவம் | • தனியார் முயற்சியாண்மை தனியார் சொத்துடைமை விலை முறையை அடிப் படையாகக் கொண்டு உற்பத்தி தொடர்பாகத் தீர்மானமெடுத்தல்<br>• இலாப நோக்குப் பொறி | • அமெரிக்க ஐக்கிய நாடுகள்<br>• இங்கிலாந்து<br>• யபப்பான்<br>• பிரான்சு<br>• கனடா |
| சமவுடமை (சமரசம்) | • பொது ஆதன உரித்து<br>• அரச முயற்சியாண்மை<br>• மத்திய திட்டமிடல் சபை மூலம் பண்டங்கள் சேவை கள் உற்பத்தி தொடர் பாகத் தீர்மானமெடுத்தல்<br>• நலன்புரி எண்ணக்கரு | • கியுபா<br>• வட கொரியா |
| கலப்பு | • தனியாள் மற்றும் பொது முயற்சியாண்மை காணப்படல்.<br>• தனியாள் மற்றும் அரச ஆதன உரித்து காணப் படல்.<br>(இலங்கை உதாரணங் களை எடுத்துக் காட்டுக) | • இலங்கை<br>• இந்தியா<br>• பாகிஸ்தான் |

**தரவுள்ளீடுகள்**

முதலாளித்துவ, சமவுடைமை மற்றும் கலப்புப் பொருளாதார நாடுகளைக் காண்பிக்கும் உலகப் புறவுருவப்படங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

மாணவர்கள் ஒருவொரு பொருளாதார முறை தொடர்பிலும் காண்பிக்கும் துலங்கல்களுக்கேற்ப கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி மட்டம்** :- **10.4.3 அபிவிருத்திக்குச் சார்பாக சந்தைப் பொருளாதாரத்தின் தற்போதைய போக்குகளை நுணுகியாய்வார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- "சந்தைப் பொருளாதாரம்" என்பது யாது என விளக்குவார்.
- சந்தைப் பொருளாதாரத்தின் இருப்புக்களைப் பட்டியற்படுத்துவார்.
- சந்தைப் பொருளாதாரத்தின் வெவ்வேறு வடிவங்களை விளக்குவார்.
- சந்தைப் பொருளாதாரத்தின் புதிய போக்குகளைக் கலந்துரையாடுவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- சந்தைப் பொருளாதாரத்தையும் அதன் வெவ்வேறு தன்மைகளையும் இனங்காணல்.
  - சந்தைப் பொருளாதாரம் - அறிமுகம்
  - சந்தைப் பொருளாதாரத்தின் இயல்புகள்

    உதாரணம்:
    - அரச முயற்சியாண்மைகளைத் தனியார் மயப்படுத்தல்
    - சந்தை நிலவரத்திற்கேற்ப விலை தீர்மானிக்கப்பட சந்தர்ப்பமளித்தல்.
    - தனியாள் முதலீட்டை ஊக்குவிப்பதோடு சுதேச உற்பத்திகளுக்கு உந்துதலளித்தல்.
    - மானிய மற்றும் விலைக்கட்டுப்பாட்டு முறைகளை நீக்குதல்.
    - பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடு குறைவாகக் காணப்படல்
- சந்தைப் பொருளாதாரங்களின் வெவ்வேறு தன்மைகள்
  - நிலைமாறும் பொருளாதாரம்
    - நட்டத்தில் இயங்கிவரும் அரச முயற்சியாண்மைகளைத் தனியார் மயப்படுத்தல்.
    - தனியார் முயற்சியாண்மைக்கு ஊக்கமளித்தல்.
    - பொருளாதார கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல்.

      உதாரணம்: செக்கோஸ்லொவக்கியா, போலந்து, ரூமேனியா, பல்கேரியா, ஹங்கேரி
- தற்காலத்தில் நடைமுறையிலுள்ள சமூகப் பொருளாதாரங்களில் நிலைமாறும் பொருளாதாரத்தின் இயல்புகள் காணப்படுகின்றன.

  உதாரணம்: சீனா
  ரஷ்யா
- மற்றும் சில சந்தைப் பொருளாதாரங்களில் முதலாளித்துவச் சந்தையின் இயல்புகள் அதிக அளவில் அடங்கியுள்ளன.

  உதாரணம் : சிங்கப்பூர், தென்கொரியா, தாய்வான், ஹொங்கொங்

**தரவுள்ளீடுகள்**

ஒவ்வொரு பொருளாதார முறைகள் தொடர்பாகவும் எழுதப்பட்டுள்ள ஏடுகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

சந்தைப் பொருளாதாரங்களில் வெவ்வேறு இயல்புகள் தொடர்பில் மாணவரை விவாதங்களில் ஈடுபடுத்தி அதன் மூலம் கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி மட்டம்** :- **10.4.4 இலங்கைப் பொருளாதாரத்தின் மீது உலக மயமாதலின் செல்வாக்கைப் பகுத்தாய்வார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- இலங்கையின் தற்போதைய பொருளாதார முறையின் விசேட இயல்புகளைப் பட்டியற்படுத்துவார்.
- 'அபிவிருத்தி' எனும் எண்ணக்கருவை வரைவிலக்கணப் படுத்துவார்.
- தற்கால இலங்கையின் புதிய அபிவிருத்திப் போக்குகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவார்.
- உலகப் பொருளாதாரத்தின் மீது உலகமயமாதலில் செல்வாக்கை விவரிப்பார்.
- உலகமயமாதலானது, இலங்கைப் பொருளாதாரத்தில் செலுத்தும் செல்வாக்கை நுணுகியாய்வார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- அபிவிருத்தி - அறிமுகம்
  - அபிவிருத்தி எனும் எண்ணக்ருவை வெவ்வேறு துறைகளின் கீழ் காட்டவும்
    - பொருளாதார அபிவிருத்தி
    - மானிட, சமூக அபிவிருத்தி
    - பண்பாட்டு அபிவிருத்தி
    - பேண்தகு அபிவிருத்தி
- தற்கால இலங்கைப் பொருளாதாரத்துடன் இணைந்த அபிவிருத்திப் போக்குகள்
- சுதந்திரத்துக்குப் பிற்பட்ட பொருளாதாரத்தை ஐந்து (5) கட்டங்களாகப் பிரிக்கலாம்.
  - 1948 - 1960 - இரட்டைப் பொருளாதார முறை காணப்பட்டமை
  - 1961 - 1970 - வரையிலான காலத்தில் பொருளாதாரத்தில் பாதி திறந்த தன்மை காணப்பட்டமை

    உதாரணம்: இறுக்கமான செலாவணிக்கட்டுப்பாடு நீக்கப்பட்டமை, மானியங்கள் குறைக்கப்பட்டமை (1966)
  - 1970 - 1977 மூடிய பொருளாதாரம்
  - 1977 இன் பின்னர் திறந்த பொருளாதாரம்

    இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில்மயமாக்கத்துக்குப் பதிலாக ஏற்றுமதி நோக்கு கைத்தொழில்மயமாக்கம் தோன்றியமை
  - 2004 தொடக்கம் இன்று வரை

    உதாரணம் :
    - அரச முயற்சியாண்மைகளைத் தனியார் மயப்படுத்தலை இரத்துச் செய்தல்.
    - பேண்தகு பொருளாதார அபிவிருத்தியைப் பேணிச் செல்வதற்குத் தேவையான அடித்தளக் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல். (அதிவேகப் பாதைகள், மின் உற்பத்தி நிலையங்கள், துறைமுகங்கள், விமான நிலையம்)
    - விவசாயத்துறையை விருத்தி செய்வதற்காக பசளை மானியம் வழங்குதல்
    - விவசாய உற்பத்திகளை அரச துறையின் தலையீட்டுடன் கொள்வனவு செய்தலும் உத்தரவாத விலை முறையும்.

- வறிய மக்களுக்காக பொருளாதார அபிவிருத்தி உத்திகளை நடைமுறைப் படுத்துதல். (திவி நெகும, மக நெகும) சமுர்த்தி மானிய உதவி
- வெளிநாட்டு முதலீட்டாளரை ஊக்குவித்தல்.
- மீனவர்க்கு எரிபொருள் மானியங்கள் வழங்குதல்
- போக்குவரத்து முறைமையை மேம்படுத்தல்.
  இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளின் தொகையை அதிகரித்து, புகையிரதங்களின் தொகையை அதிகரித்தல்.
- சுற்றுலாத் துறை மேம்படுத்துவதன் மூலம் சுற்றுலா வருவாயை அதிகரித்தல் (நகர அலங்கரிப்பு, ஹோட்டல் வசதிகளை மேம்படுத்தல்)
- இலங்கையை "ஆசியாவின் வியத்தகு நாடாக" மாற்றுவதற்காக "ஐவகைச் சக்தி மையத்தை" அறிமுகஞ் செய்தல்.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பாக விசேட கவனஞ் செலுத்துதல். (வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் மத்திய வங்கி அறிக்கையிலிருந்து பொருத்தமான தகவல்களைத் திரட்டுவதற்காக)
- புதிய பொருளாதார அபிவிருத்தி காரணமாக இலங்கைக்கு கிடைத்த பல அனுகூலங்களும் உள்ளன.

**அனுகூலங்கள்**

- தொழில்வாய்ப்புக்கள் அதிகரித்தல்
- வெளிநாட்டுச் செலவணிச் சம்பாத்தியம் அதிகரித்தல்
- பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்தல்.
- பிரதேச ரீதியில் அபிவிருத்தி
- உற்பத்தி அதிகரிப்பு
- சென்மதிநிலுவை அறிக்கையில் சேவைக் கணக்கின் வளர்ச்சி
- தகவல் தொழினுட்பத்துறையின் வெவ்வேறு அம்சங்களுடன் இணைந்த தொழிற் சந்தை விரிவடைதல்.

- தொழினுட்பவிருத்தி, உலகமயமாக்கம் ஆகியன உலகப் பொருளாதாரத்தின் மீதும் இலங்கை மீதும் செலுத்தும் செல்வாக்கு.
  - உலகமயமாக்கம் - அறிமுகம்
- உலகமயமாக்கலானது உலக பொருளாதாரத்தில் செலுத்தும் செல்வாக்கு.

- புதிய சகஸ்ரத்தில் உலகப் பொருளாதார அபிவிருத்தி துரித மாற்றங்களுக்கு உள்ளாதல்.
- சர்வதேச நாண நிதியம், உலக வங்கி, உலக சந்தை ஆகியவற்றின் உதவியைப் பெற்று மேற்கு உலகம் உலகமயமாக்கங்களுக்கு உள்ளாகுதல்.
- பிராந்திய/ வலய அமைப்புக்கள் உருவாதலும் அவற்றை முதன்மையாகக் கொண்டு சர்வதேச வணிக நடவடிக்கைகளுடன் தொடர்புறுதல்.
  உதாரணம்:
  ஐரோப்பிய சங்கம் (Eu) வட அமெரிக்கா சுதந்திர ஒப்பந்தம் (North American Free Trade Agreement – NAFTA) தெற்காசியத் தேர்வு வணிக ஒப்பந்தம் (South Asian prefenenfial Trade Agreemat SAPTA), வங்காள கடற்பட்டியைச் சூழவுள்ள நாடுகளால் தாபிக்கப்பட்ட பொருளாதார ஒத்துழைப்புச் சங்கம். (BIMST – EC) சர்வதேச பொருளா தாரக் குழுக்கள் தோன்றுதல். G–7, G–77, G–24, G–15

- வெளிநாட்டு நேரடி முதலீட்டு சர்வதேச ரீதியில்
  உதாரணம்: பல்தேசியக் கம்பெனிகள்
- சந்தை அபிவிருத்தியின் ஊடாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் இழிவாதல்.
  உதாரணம்: தரமான பண்டங்களை உற்பத்தி செய்தல் தொடர்பான பிரச்சினைகள்.
- அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் உற்பத்தி தொடர்பாக பல்வேறு பல்தேசிய கம்பனிகளால் செலுத்தப்படும் செல்வாக்கு.

உதாரணம் : தேயிலைச் சந்தை, பல்வேறு மென்பான வகைகளின் செல்வாக்கு
எமது நாட்டுப் பணம் வெளிநாடுகளின் பால் செல்லல்.

- உலகமயமாக்கலானது இலங்கை மீது செலுத்திய செல்வாக்கு

**நேர் வகையான செல்வாக்குகள்**

- மூலதனக் குறைபாட்டுக்கான ஒரு தீர்வாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பயன்படுத்தத்தக்கதாக இருந்தது.
- இலங்கைப் பொருளாதாரத்தில் கட்டமைப்பு ரீதியான செல்வாக்கை ஏற்படுத்துதல் (விவசாயத்துறையை விஞ்சி கைத்தொழில் துறை முக்கியத்துவம் பெறுதல், சேவைத்துறையின் பங்களிப்பானது அதிகமதிக மாக கைத்தொழில் துறையின்பால் செல்லல்)
- தேசிய உற்பத்திகள், சர்வதேச சந்தையுடன் தொடர்புறுதல்.
  உதாரணம்: ஆடைகள், மென்பொருள் உற்பத்தி
- அடித்தளக் கட்டமைப்பு வசதிகள் விரிவடைதன் விளைவாக நிதிப் பெயர்வு துரிதமடைதல்.
- பிரதேச அபிவிருத்தி
- பிராந்திய/ வலய அபிவிருத்தியுடன் தொடர்புறுவதால் பொருளாதார, அரசியல் அனுகூலங்கள்.

**மறை வகையான செல்வாக்குகள்**

- உண்ணாட்டுச் சந்தையில் சுதேச உற்பத்திகளை சந்தைப்படுத்துதல் தொடர்பான இடர்கள் தோன்றுதல்.
  உதாரணம்: கைத்தறிப்புடைவை
- பொருத்தமற்ற நுகர்வுக் கோலத்தின்பால் செல்லுதல்.
  உதாரணம்: உடனடி உணவுகள் (Fast food)
- பண்பாட்டுச் சீரழிவு
- பொருளாதாரத்தின் உள்வாரிப் பிரச்சினைகள் தொடர்பாகப் பொருத்தமற்ற வகையில் செல்வாக்குச் செலுத்துதல்.
  உதாரணம் : மானியங்களைக் குறைத்தல்.

**தரவுள்ளீடுகள்**

இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை, இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

ஒவ்வொரு காலகட்டத்திலும் இலங்கையில் ஏற்பட்ட அபிவிருத்திட்டடங்களையும் அதனால் ஏற்படட பொருளாதார விளைவுகளையும் மாணவரை விவாதத்துக்குட்படுத்தி காண்பிக்கும் துலங்கல்களுக்கேற்ப கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

## 10.5 சனநாயக சமூகமொன்றில் முரண்பாடு தீர்த்தல்

தற்காலச் சமூகம் சிக்கார்ந்து செல்லும் அதேவேளை, தனியாளிடத்தேயும் தனியாட்களுக்கிடையேயும் சமூகக் குழுக்களுக்கு இடையேயும் நாடுகளுக்கு இடையேயும் முரண்பாடுகள் தோன்றுவதைக் காண முடிகின்றது. இவ்வாறாக முரண்பாடுகள் ஏற்படுவதன் விளைவாக விலைமதிக்க முடியாத பெருந்தொகையான உயிரிழப்புக்களும் சொத்து அழிவுகளும் ஏற்படும். அதுமட்டுமன்றி சமூகத்தில் ஊனமுற்றோரும் நாதியற்றோரும் பெருகும் நிலையும் ஏற்படும்.

எனவே சனநாயகச் சமூகமொன்றில் முரண்பாடு தீர்ப்பதற்காக முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்களை இனங்காணல் மற்றும் முரண்பாடு தீர்த்தலுக்கான தேர்ச்சியை மாணவரிடத்தே வளர்ப்பதும் சமூகத்தின் தேவையாக உள்ளது. முரண்பாடுகளை அமைதியாகத் தீர்த்துக்கொள்வதற்காக ஏனையோரின் கருத்துக்களை மதித்தல், நியாயமாகத் தீர்ப்புச் செய்தல், ஏனைய பண்பாடுகளை மதித்தல், பொறுமை போன்ற பண்புகளை மாணவரிடத்தே வளர்ப்பது அவசியமாகும். இதன் மூலம் சமாதானமும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுவதோடு உயிரிழப்புக்கள், ஆதன அழிவுகளும் தவிர்க்கப்படும். **சனநாயக சமூகமொன்றில் முரண்பாடு தீர்ப்பதற்குத்** தேவையான தேர்ச்சிகளை மாணவரிடத்தே வளர்ப்பதற்கு அவசியமான கற்றல் அனுபவங்களை வழங்குவதே இப்பாட அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

**தேர்ச்சி 10.5** :- முரண்பாடு தீர்ப்பதற்குத் தேவையான தேர்ச்சிகளை வெளிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- **10.5.1 வெவ்வேறு வகையான முரண்பாடுகள் தோன்றுவதற் கான காரணிகளைத் தேடியறிவார்.**

**பாடவேளைகள்** :- 05

**கற்றற் பேறுகள்** :-

- முரண்பாடு என்பது யாது என விளக்குவார்.
- முரண்பாட்டு வகைகளைக் குறிப்பிடுவார்.
- முரண்பாடுகள் தோன்றுவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகளை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- முரண்பாடு வரைவிலக்கணம் செய்தல்

  முரண்பாட்டு வகைகள்

  i. ஆளக முரண்பாடுகள்
    - சகியாமை
    - கருத்து வேறுபாடு
    - தடைகள் ஏற்படல்
    - எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாமை

  ii. சமூகப் பொருளாதார முரண்பாடுகள்

  iii. அரசியல் முரண்பாடுகள்

- முரண்பாடுகள் தோன்றுவதில் பங்களிப்புச் செய்யும் அரசியல் மூலங்கள்.
  - நாட்டு எல்லை முரண்பாடுகள்
  - அதிகார விரிவாக்கம்
- முரண்பாடுகள் தோன்றுவதில் பங்களிப்புச் செய்யும் பொருளாதார மூலங்கள்.
  - வளங்களைப் பெறுதல்
  - சந்தை வாய்ப்புக்களைப் பெறுதல்
  - வறுமை
- முரண்பாடுகள் தோன்றுவதில் பங்களிப்புச் செய்யும் சமூக மூலங்கள்.
  - கருத்து வேறுபாடுகள்
  - இன பேதங்கள்
  - சமய பேதங்கள்
  - நிற பேதங்கள்

**தரவுள்ளீடு**

பல்வேறு முரண்பாடுகளுடன் தொடர்பான பத்திரிகைகள், சஞ்சிகைகள், கட்டுரைகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

தனிநபருக்குள் ஆளக ஏற்படும் முரண்பாடுகள், தனியாட்களுக்கிடையிலான, சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் முரண்பாடுகளை வெவ்வேறு உதாரணங்களுடன் கலந்துரையாடி அது தொடர்பில் மாணவர் காட்டும் துலங்கல்களினடிப்படையில் பொருத்தமான நியதிகளைக் கொண்டு கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி மட்டம் :- 10.5.2 முரண்பாடு தீர்ப்பதற்காக நேர்வகை அணுகுமுறை களைத் தேடியாய்வார்.**

**பாடவேளைகள் :-** 07

**கற்றற் பேறுகள் :-**

- முரண்பாடு தீர்ப்பதற்கான வெவ்வேறு முறையியல்களை விளக்குவார்.
- முரண்பாடுகளைச் சமாதானமாக தீர்த்துக்கொள்வது, பிரசையின் பொறுப்பாகும் என்பதை ஏற்று அதற்குச் சார்பாக விடயங்களை முன்வைப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- முரண்பாடு தீர்த்தல் - வெவ்வேறு முறைகள்
  கலந்துரையாடுதல்
  உதாரணம்:
  - கலந்துரையாடல் முறை வெற்றியடைவதற்கு
    - பரஸ்பர ஒத்துழைப்பு
    - விளக்கத்துடன் செயற்படுதல்
    
    இருதரப்பினரும் அர்ப்பணிப்புடன் காணப்படுதல் வேண்டும்.
  - கலந்தாலோசித்தலும் பேரம் பேசுதலும்

- தலையிடல்
    - தலையிட்டுச் செயற்படுபவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள்
      உதாரணம்:
        - இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒருவராக இருத்தல்.
        - முரண்பாடு தொடர்பான விளக்கத்தைப் பெற்றிருத்தல்.
        - முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான உதவி புரிதல்.
        - தமது தீர்ப்பை ஏனையோர் மீது திணிக்காதிருத்தல்.
        - இரு தரப்பினர் மீதும் செல்வாக்குச் செலுத்தாதிருத்தல்.
- இணக்கப்படுத்தல்
    - இணக்கப்படுத்துபவரின் பணி பின்வருமாறு
      உதாரணம்:
        - எதிரான தரப்பினருக்கு இடையே பேச்சுவார்த்தையை ஏற்படுத்துதல்.
        - முரண்பாட்டுக்கு ஏதுவான காரணங்கள் தொடர்பாகப் பகுப்பாய்வு செய்ய வழிகோலுதல்.
        - முரண்பாட்டுக்கு ஏதுவாகியுள்ள காரணங்கள் தொடர்பாக நேரடியாகவோ மறைமுகமாகவோ கலந்துரையாடல்களை ஏற்படுத்துதல்.
        - எதிரான தரப்பினருக்கு இடையே வேறுபாடுகளையும் இடைவெளிகளையும் குறைப்பதற்காகச் செயற்படுதல்.
        - இணக்கப்பாட்டுக்கு வருவதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்றினைப் பிரேரித்தல்.
- இணக்கப்பாடு செய்பவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள்
  உதாரணம்:
    - பொறுமையாக செவிமடுப்பவராக இருத்தல்
    - நம்பகத்தன்மை
    - இணக்கப்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவராக இருத்தல்.
- நடுத்தீர்ப்பு
  நடுத்தீர்ப்பாளர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள்
  உதாரணம்:
    - தன்னார்வத்துடன் செயற்படுபவராக இருத்தல்
    - தனித்துவத்தைப் பாதுகாப்பவராக இருத்தல்
    - துரிதமாக தீர்த்தல்
    - பிரதிபலன்களை எதிர்பாராமை
    - பக்கச் சார்பின்மை
    - முரண்பாடு தொடர்பான நல்ல விளக்கத்தைக் கொண்டிருத்தல்.
- தீர்ப்புச் செய்தல்
- இணக்கப்பாட்டைக் கட்டியெழுப்புதல்
- ஆலோசனை

**தரவுள்ளீடுகள்**
முரண்பாட்டுத் தீர்வைக் காண்பிக்கும் படங்கள், கட்டுரைகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

முரமண்பாடுகள் பற்றிய வெவ்வேறு சம்பவங்கள் சிலவற்றைத் தீர்ப்பதற்கு மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து அதன் மூலம் கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**தேர்ச்சி மட்டம்** :- **10.5.3 சனநாயக சமூகமொன்றில் முரண்பாடு தீர்த்தலின் முக்கியத்துவத்தை பகுத்தாராய்வார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- முரண்பாடுகளை தீர்த்துக்கொள்வதற்காக, பிரசையொருவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகளைக் கலந்துரை யாடுவார்.
- முரண்பாடுகளைத் தவிர்த்தல் மற்றும் சமாதானமாக தீர்த்துக் கொள்வதன் மூலம் தமது வாழ்க்கையில் ஏற்படும் நன்மைகளை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

- முரண்பாடுகளைச் சமாதானத் தீர்த்துக்கொள்வதற்காகப் பிரசையொருவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் :
  உதாரணம்:
  கலந்துரையாடுதல்
  உதாரணம்:
  - ஏனையோரின் கருத்துக்களை மதித்தல்.
  - உரிமைகளை அனுபவித்தவாறு தமது கடமைகளை நிறைவேற்றல்.
  - தீரமானமெடுக்கும் திறன்
  - பிரச்சினை தீர்க்கும் திறன்
  - நியாயமான தீர்ப்பு
  - ஆக்கபூர்வமாகச் சிந்திக்கும் திறன்
  - வெற்றி - தோல்வியைச் சமமாக ஏற்றுக் கொள்வார்.
  - ஏனையோரின் பண்பாடுகளை மதித்தல்.
  - தியாக குணம்
  - அகிம்சை
  - பொறுமை
  - விளைதிறனை தொடர்பாடல்
  - கருணை
  - ஆளிடைத் தொடர்பு
  - உணர்வுகளை எதிர்கொள்ளும் திறன்
  - ஒவ்வொருவரையும் மதித்தல்
  - சிறந்த செவிமடுப்பவராக இருத்தல்
  - இன்சொல் மொழிதல்
- முரண்பாடுகளை சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதன் அனுகூலங்கள்
  உதாரணம்:
  - சமாதானமும் பாதுகாப்பும் காக்கப்படுதல்.
  - உயிரிழப்புக்கள் தவிர்க்கப்படுதல்

- ஆதன இழப்புக்கள் தவிர்க்கப்படுதல்
- வள வீண்விரயம் தவிர்க்கப்படுதல்
- தனி ஆட்களின் உள ரீதியான வீழ்ச்சி தவிர்க்கப்படுதல்
- உள நெருக்கிடை குறைவடைதல்
- தனியாளின் சுய கௌரவம் பாதுகாக்கப்படுதல்.
- சமூகத்துக்கு ஏற்படும் இழப்புக்கள் குறைவடைதல்
- பரஸ்பர ஒத்துழைப்பு விருத்தியடைதல்
- அமைதியான/சமாதான/ சமூக முறைமை உருவாதல்

**தரவுள்ளீடுகள்**
சமாதானமான சகவாழ்வு பற்றி எழுதப்பட்டுள்ள கட்டுரைகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**
முரண்பாடுகளைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதால் ஏற்படும் தன்மைகளும் பிரசையொருவர் கொண்டிருந்த பண்புகள் தொடர்பிலும் கட்டுரை வரைவதற்கும் மாணவர்க்குச் சந்தர்ப்பமளித்து அதன் மூலம் கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்க.

**கணினி வடிவமைப்பு**

| | |
|---|---|
| திருமதி. எம்.என்.எப். றிஹானா | தேசிய கல்வி நிறுவகம் |
| திருமதி. என். நந்தனி | தேசிய கல்வி நிறுவகம் |

**ஏனைய உதவிகள்**

| | |
|---|---|
| செல்வி. ஏ.எல்.எஸ்.பீ. அத்தபத்து | சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி. |
| திரு. ஆர்.எம். ருபசிங்ஹ | சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி. |
| திரு. பியதிலக்க பர்ணாந்து | சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி. |
| திருமதி. எஸ்.எஸ். ஜயவர்தன | சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி. |

**அட்டைப்படம்**

| | |
|---|---|
| திரு. ரவீந்திர தேனுவர | விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |